தென்மொழி

நாம் தமிழரல்லர்.

பள்ளென்போம்; பறையென்போம்;
நாட்டா ரென்போம்!
பழிதன்னை யெண்ணாமல் வண்ணா
ரென்போம்?
பிள்ளையென்போம்; முதலியென்போம்;
நாய்க்கர் என்போம்!
பிழைநாணா தருந்ததியர், படையா
ளென்போம்!
எள்ளல்செய் திழிக்கின்றோம்; தாழ்விக்
கின்றோம்!
எண்ணுங்கள்; நமைத் தமிழர்
என்கின் றோமா?
குள்ளமனப் பான்மையிது தொலையு மட்டும்
கூசுங்கள்; நாணுங்கள்; தமிழ்நாட் டாரே!

1–2–60

ஆசிரியர்
பெருஞ்சித்திரன்



இலக்கியத் திங்களிதழ்
25 காசுகள்

"தென்மொழி" வளர்ச்சிக்கு

'தமிழ்மொழி தனித்தியங்கும்' என்று பேசுவோரும், 'தமிழ் நாட்டில் வடமொழி தலைகாட்டக்கூடாது' என்று கருதுவாரும் தாம் பேசுங்காலும், எழுதுங்காலும் தனித்தமிழில், பிறமொழித் துணை யின்றிப் பேசவும் எழுதவும் செய்கின்றனரா எனின் வெட்கக் கேடே. இக் கோட்பாடுகளுக்காகவே, தமிழரால் நடத்தப்பெறும். தமிழ்த் தாளிகைகளும் அவ்வாறு தனித்தமிழில் நடத்தப்பெறுவனவாக வில்லை. இந்நிலையைத் 'தென்மொழி' அடியோடு மாற்றியது. தனித் தமிழிலேயே பாட்டுக்கள் இசைக்கவும், உரைநடை எழுதவும், நாட கங்கள் வரையவும் முடியும் என்று கூறிச்செயல்படுத்தியும் வருகின் றது.

'தனித்தமிழில் எழுதினால் மக்கள் எளிதில் புரிந்து கொள் ளார்' என்று மறுக்கும் அத்தகையோரின் ஆற்றலின்மையைத் 'தென்மொழி' எடுத்துக்காட்டியது.

தாளிகையுலகிலும், தமிழ் உலகிலும் ஒரு புதுமையை ஏற் படுத்திய பெருமை தென்மொழிக்கு உண்டெனில், அதை மறுப் பார் இலர்.

புதுமை விரும்பும் மாணவரும், ஆசிரியரும் இதனைப் போற்றி வரவேற்பதொன்றே நாம் கூறுவதை வலியுறுத்தும்.

தென்மொழியை இருகை நீட்டி வரவேற்பார் தாம் வரைந் துள்ள மடல்களை அவ்வாறே வெளியிடின் நூற்றுக்கணக்கான பக் கங்களைக் கொண்ட ஒரு கருத்து நூலாக அது திகழும்.

இத்தகைய சிறப்பு நலன்களால் மட்டும் ஒரு தாளிகை வளர்ந்துவிடுவதில்லை என்பதை நாம் இதனைத்தொடங்கி நான்கைந்து திங்கட்குப்பின் உணரவேண்டுவதாயிற்று.

இதுவரை வெளிவந்த தென்மொழிக்கு எத்தகைய இடர்ப் பாடுகள் இருந்தன என்பதைப் பின்பு அறிவிக்கின்றோம். கடந்தகால நிகழ்ச்சிகளால் நாம் அறிவது இது :—

தென்மொழிக்கு ஒரு தனி அச்சகம் ஏற்பட்டாலொழிய. இது மேலும் சிறப்புற வழியில்லை.

ஆதலின் தென்மொழிக்கு உறுப்பினரா யிருப்போர் ஒவ் வொருவரும் தம்வழியில் ஒவ்வோர் உறுப்பினரைச் சேர்த்துவைத்து, இதன் அச்சக வளர்ச்சிக்கு உதவுமாறு வேண்டுகின்றோம்.

இதன்பால் அன்புகொண்ட தமிழன்பர்தம்மால் இயன்ற பொருளுதவிகளைச் செய்யுமாறு கைகூப்புகின்றோம்.

இதன் வளர்ச்சியில் பங்குகொண்ட விற்பனையாளர் மேலும் பல படிகளை விற்றுத் தென்மொழி வளர உதவுமாறு பணிகின்றோம்.

ஆசிரியராயிருப்போர் தம் மாணவர்க்கும், நண்பர்க்கும் தென்மொழி பற்றிக்கூறி அன்னாரையும் இதனை வாங்கிப் படிக்கச் செய்யுமாறு தலை தாழ்த்துகின்றோம்.

'தென்மொழி' பலராலும் வரவேற்கப்படுகின்றது என்று நாம் கூறுவதைத் தமிழன்பர் மெய்ப்பிப்பர் என்று நம்புகின்றோம்.

தமிழுக்கு உயிர்தரவேண்டாம்; உழைப்பையாவது நல்க வேண்டாமா? உங்கள் முயற்சி வெற்றியளிக்கட்டும்.

அன்பன்,

பெருஞ்சித்திரன்.

தென்மொழி
இலக்கிய இதழ்

‘கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்தம் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை’ எனவே தமிழர் தோளெழுந்தால்,
எஞ்சுவதில்லை புவியில் எவரும் எதிர்நின்றே!

இயல் ௧	திருவள்ளுவராண்டு ௧௯௯௧ தைத்திங்கள் ௧௫ (1—2—60)	இசை ௧௫

சாதி சமயங்கள்

அறிவுத் துறையிலும், மக்கள் ஒற்றுமைப் பண்பாட்டிலும் மற்ற நாட்டினர் நாகரிகத்தின் மலை முகட்டில் நிற்ப, நந்தமிழ் நாட்டார் மட்டும் சாதிப் படுகுழியிலும் சமயச் சேற்றிலும் வீழ்ந்து அழுந்திக்கொண்டிருக்கின்றனர். இதுபற்றி, இந்நாட்டில் ‘கற்றோம்’ என்று தருக்கித்திரியும் யாவரும் நாணித் தலை கவிழ்க்க வேண்டும்; அற்றேல் மானமிருப்பின் இவ்விழிவு தாங்காமல் உயிரைப் போக்கிக் கொள்ளல் வேண்டும்.

ஆயிர மாயிரம் நெறிமுறை நூல்கள் தோன்றிய நாடென்றும், இறைநெறி நூல்கள் நிறைந்துள்ள உயர்நாடென்றும், எடுத்த தற்கெல்லாம் இறைவன் திருத்தோற்ற மெடுத்து மெய்ந்நெறி வாழ்க்கை முறைகளை மக்கள் உய்யும் பொருட்டுக் கூறிப் போந்த திருநாடென்றும், பன்னூறு இலக்கியங்கள் தோன்றிப் பண்பாடு காத்த பொன்நாடென்றும், ஆயிரக்கணக்கான கோயில்களும், பல்லாயிரக் கணக்கான புராண, ஆகம உபநிடத நெறிமுறைகளும், அவற்றை மக்கட்குக் கூறுதலையே தத்தம் வாழ்வுத் தொண்டாகக் கருதி வாழ்ந்த நூற்றுக் கணக்கான துறவியரும், ஒழுக்க நெறியாளரும், அறநூல்கள் பலவும் தோன்றிப் படர்ந்து பல்கிய நாடென்றும் புகழப் படுகின்ற இந்நாட்டில் தான் நூற்றுக்கணக்கான சாதிப் பகுப்புக்களும் சமயப் பகுப்புக்களும் புகுந்து மக்களுக்குள் உயர்வு தாழ்வு கற்பிக்கவும், விலங்கினும் கீழாக மக்களுட் பலரை வெறுக்கச் செய்யவும் செய்தன. இவ்வழுகலையும், ஒழுகலையும் சமயப் புனு

கிட்டு மூடிப் பொதிந்து வைத்து வெளிநாட்டார் அறியாமற் செய்துவரும் இந்நாட்டுப் பொறுப்பாளர் தம் அறியாமையை என்னென்போம்.

ஒரே அணுத்திரளையாக மாந்தர் உருப்பெறுதலும் ஒரே உணர்வாலும் அறிவாலும், குருதியோட்டக் கொள்கலன்களாலும் உருவாக்கப்பெற்று, மக்களுள் ஒருவராய் விளங்கியிருப்ப, அவரை இழிந்தோர் என்று பழித்தொதுக்குதல் எத்துணை மடமைச் செயல் ஆகும். இதனை மடமைச் செயல் என்று அறிந்தும் அதனை விலக்கி யொழிக்கமாட்டாமல் பேணி வருவது முன்னையினும் எத்துணை மடமைச் செயலாம்.

இறைவன் ஒருவன் உண்மையாயின், எல்லாச் சமயங்களும் அவ்விறைவனையே நாடிப் போகின்றன என்பதும் உண்மையாயின், பல சமயங்கள் இருத்தலும், அச்சமயக் கணக்கர் தம்வாழ்நாள் முழுவதும் மக்கட்கு வாழ்வுத் தொண்டாற்றுவது பற்றி எள்ளின் மூக்கத்துணையும் எண்ணாது, தந்தம் சமயமேம்பாடுகளையே கூறி வாணாளை வீணாளாகக் கொண்டு, உண்டு, உறங்கிக் கொழுத்துப் புழுத்து வீழ்தலும் எற்றுக்கோ வென்று அறியோம். இவ்வீணுரைப் போலிப்புறச் சமயங்கட் பட்டோரும் ஒருவர்க் கொருவர் தாம் தம்மை உயர்ந்தோர் என்னலும், இன்னொருவரைத் தாழ்ந்தோர் என்னலும், அறிவியல் முன்னேறி கேளெய்தி (Rocket) தோன்றிய இக்காலத்துக்கும் ஏற்றதாகுமோ? அறிஞரே ஓர்ந்து தெளிமின்.

சாதி என்ற சொல் பண்டைத்தமிழ் நூல்களில் காணாத ஒரு சொல்லாம். திருக்குறள் முதலிய அறநூல்களில் குலம், குடி, என்று வருகின்ற சொற்களும் சாதி என்ற பிறப்புப் பிரிவை உணர்த்தா. இவற்றிற்கு உரை செய்தோர் சமயத்தாலும், சாதியாலும் மடமை எனும் படுகுழியில் வீழ்த்தப்பட்டவரே யாதலின், அவரவர் போக்கிற்கியைய வீணுரையே செய்து போந்தார். தமிழில் உள்ள பழய நூலான தொல்காப்பியத்தில் கூறப்பட்டிருக்கும் மக்கட் பாகுபாடுகள் பெரும்பாலும் தொழில் பற்றியவாயினும், ஆரியரின் புரையோட்டக் கருத்துக்கள் தழுவியனவேயாம்.

வெளிநாட்டாரை "நீவிர் யாரோ?" வெனின், அவர் சமயம்பற்றிக் கிறித்துவர் என்றோ யூதர் என்றோ, அற்றுயின் நாடுபற்றிச் சீனர் என்றோ, அமெரிக்கர் என்றோ, அதுவுமன்றி மொழிபற்றி ஆங்கிலர் என்றோ, பிரெஞ்சியர் என்றோ கூறி நிற்ப,

இப்பாழுந் தமிழரோ 'நீவிர் யாவர்' எனின், மொழிபற்றித் தமிழர் என்றுங் கூருது, நாடுபற்றிச் சென்னையர், மதுரையர் என்றும் கூருது, சமயம் பற்றிச் சைவர், வைணவர் என்றும் கூருது, 'யாம் தென்னிந்திய சைவவேளாளர் குடிப் பிள்ளைமார், என்றும், முதலிமார் என்றும், தருக்கோடும் செருக்கோடும் கூறுவதன்றி, 'யாம் இவர் குடியிற் பெண்கொள்ளேம், என்றும், 'யாம் இவர் வீட்டுத் திண்ணையிலும் ஏறேம்' என்றும் அறிவிலாது புல்லுரை புகல்வர்.

இச்சாதிச் சமயச் செருக்குகள் இவற்ருேடமையாது வேற்றுமையையும், பலமூடப் பழக்க வழக்கங்களையும் இந்நாட்டார் தம் மூளையில் வேர்விட்டு முளைத்துக் கிளைக்கவும் நல்ல எருவாகவும் பயன்படுகின்றன.

இவற்றின் பயனய் தமிழர் என்ற ஓர் இனமே இல்லாதொழிந்ததே. தமிழர் என்று இக்காலத்துச் சொல்லளவிலும் மொழியளவிலும் கூறித் தலையெடுத்துப் பேசுவார் தமக்கும் உள்ளூர தம்தம் சாதிப்புற்றும், சமயப்பற்றும் பற்றிப் படர்ந்தனவே தவிர, தமிழ்ப்பற்ருே, தமிழரினப்பற்ருே, தமிழ்நாட்டுப் பற்ருே, தினையளவும் இல்லையென்பதை எல்லோரும் ஒப்பியே ஆகல் வேண்டும்.

தமிழருள் கன்னடத்தார், தெலுங்கர், மலையாளத்தார் எனப் பிரிந்த பின்றை, எஞ்சியுள்ளோரில், ஒரு பகுதியினர் முகமதியராய் மாறி உருதுமொழி பேசித் தமிழ்ப்பற்றும் தமிழ் நாட்டுப்பற்றும், தமிழ் இனப்பற்றும் இன்றிக் குலைந்தும், கிறித்துவராய் மாறிக் கிறித்துவ மறையுங் கையுமாய்த் திரிந்து தமிழர் இனத்தொடும், மொழியொடும் மாறுபட்டு வாழ்ந்தும் வருகின்றனர். இவர் எல்லோரும் போக மிகுந்திருப்பவரிலும் சாதி, சமயப் படுகுழிகளில் வீழ்ந்துபோன காரணத்தால் ஒற்றுமை இன்றியும், நல்லுணர்வின்றியும் ஒரு சாதியாரைப்பற்றி ஒரு சாதியார் கவலைப்படாது தன் சாதிக்காரர் உய்யவே தன் மூச்சை இயக்குவதும், வேறு சாதிக்காரர் முன்னேறிப் போகில் உடலெரிந்து புகைவதும் ஆகத் தாழ்ந்துபோகின்றனர்.

இவ்வாறெல்லோரும்போக ஆரியர் கொள்கைக் குழப்பங்களை வெறுத்தொதுக்கித் தனியிடத்தே வாழ்ந்த கலப்பற்றத் தமிழரைத் தாழ்ந்தோர் என்றும், இழிந்தோர் என்றும் இத் தமிழர் என்று கூறிக் கொள்கின்றவரே தாழ்த்துவதும் வீழ்த்துவது மாக இருக்கின்ற கொடுஞ்செயலை உன்னிப்பார்க்கின், நாம் அறி

விலும், நாகரிகத்திலும் உயர்ந்துள்ளோம் என்று எவரேனும் கூறுவரோ? அவர் கூறினும் அறிந்தவர் ஒப்புவரோ? அறிவுடையோரே ஓர்மின்.

'ஆயிரம் உண்டிங்கு சாதி—எனில்
அன்னியர் வந்து புகலென்ன நீதி?' —என்று

கேட்கும் கேள்வியில் விடுதலை மூச்சு வெளிவருகின்ற அதே நேரத்தில் மடமையும் அன்றோ கொப்பளிக்கின்றது?

அன்னியர் வந்து புகவேண்டுவதில்லைதான். அதற்கென மலக்குவியலாக நாம் இருப்பது நம் அறிவுடைமையைக் காட்டுவதாகுமோ? இவ்விழிவுகளை நாம் அறியாவண்ணம் செய்து, சீழ் பிடித்துப் புரையோடிப் போகக், கருவியிட்டாற்றாமல் புண் வைத்து மூடலாமா?

ஒழுக்க விழுப்பத்திலும், அற நெறிகளிலும் தோய்ந்து பலபடக் கூறி மாற்றார் மயங்கப் பேசும் நந்தமிழ் நாட்டின் உயர்வுகள் எங்கே? சிலப்பதிகாரமும், மணிமேகலையும், கம்பராமாயணமும், வில்லிபாரதமும், திருக்குறளும், நாலடியாரும் நம் கைகளில் இருப்பது எற்றுக்கு? நம்மால் அந்நூல்களுக்குந் தாழ்வேற்படுமேயல்லாது, அந்நூல்களால் நமக்குப் பெருமை ஏற்படுமோ? சேர சோழ பாண்டிய இனம் இப்பொழுது உள்ளதா? அதுபற்றிப் பேசி எய்தப் போகும் சிறப்பென்னை? ஐயகோ, பேசிக் கெட்டதல்லாமல் தமிழன் வாழ்ந்திருந்தது என்று? கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே தமிழர் மட்டுந் தாம் தோன்றினரா? அக்கல்லும் மண்ணுங் கூடத்தாம் தோன்றியிருந்தன. அவைமட்டுமா? அறிவியல் நூற்படி புழுவும், பூச்சியும், பறவையும், விலங்குகளுந்தாம் தோன்றியிருந்தன. அதன் பழமை நோக்கி அன்று தோன்றிய கல்லை முத்தென்றும், மண்ணைப் பொன்னென்றும், குரங்கை உடன் பிறப்பென்றுமா போற்றுகின்றோம்? இல்லையே. வெறும் காலப் பழமையாலும், மொழிச் சிறப்பாலும், இலக்கிய வளத்தாலும், வான் முட்டக் கோயிலெடுப்பதாலும், செம்பாலும், வெள்ளியாலும், பொன்னாலும் தெய்வப் படிவங்களைப் பண்ணி வைப்பதாலும், அவற்றிற்குப் பாலாலும், பழத்தாலும், தேனாலும் நெய்யாலும் வழிபாடுகள்செய்வதாலுமே ஒருவன் உயர்ந்தவனென்றால், இன்று அமெரிக்கரைவிடச், சீனரைவிடச், சப்பானியரைவிடத் தமிழன் முன்னேறியல்லவோ இருத்தல்வேண்டும். அன்று......அன்று ....எந்தமிழ்மக்களே, வெறும் பழமையாலும், மொழியாலும் நீங்கள் உயரப்போவது எக்காலத்தும் நிகழப்போவதில்லை. இதை நெஞ்சில் நிறுத்துங்கள்.

(தொடர்ச்சி 37-ஆம் பக்கம் பார்க்க)

‘இயல்புடைய மூவர்’

—[ஞா. தேவநேயப் பாவாணர் எம். ஏ.]—

[1956-ஆம் ஆண்டு, மேமீ, தென்காசித் திருவள்ளுவர் கழக ஆண்டு விழாவில் 2-ஆம் நாள் ஆற்றிய தலைமைப் பேருரைச் சுருக்கம்.]

கழகக் காலப் பண்டைத் தமிழிலக்கண விலக்கியங்கள், பெரும்பாலும், தூய தமிழ்நெறிபற்றியவாதலால், அவற்றிற்குத் தமிழ்மரபு தழுவிப் பொருளுரைக்கவேண்டுவதல்லது, ஆரியக் கொள்கையடிப்படையில் விளக்கங் கூறுவது(வெளிப்படையான ஆரியச் செய்தியல்லாவிடத்து ஒரு சிறிதும் பொருந்தாது. அதிலும், ஆரியக்கோட்பாட்டை மறுத்துத் தமிழவறத்தை நாட்டும் திருக்குறளைப்பற்றியோ, சொல்லவே வேண்டுவதில்லை.

திருக்குறட்கு உரைவரைந்த பண்டையாசிரியர் பதின்மருள், பொதுவாக நோக்கின், பரிமேலழகர் சிறந்தவரே. ஆயின், உயிர் நாடியான தமிழ்க் கருத்துக்களை வலிந்தும் நலிந்தும் புதத்தி வள்ளுவர் நோக்கத்திற்கு மாறாகத் திருக்குறட்பயனையே கெடுத்துவிட்டதனால்,

> *“திருத்தகுசீர்த் தெய்வத் திருவள் ளுவர் தம்*
> *கருத்தமைதி தானே கருதி—விரித்துரைத்தான்*
> *பன்னு தமிழ்தேர் பரிமே லழகனெனும்*
> *மன்னும் உயர்நாமன் வந்து”*

> *“... ... ... நூலிற்*
> *பரித்த வுரையெல்லாம் பரிமே லழகன்*
> *தெரித்த வுரையாமோ தெளி”*

என்னும் பரிமேலழகருரைச் சிறப்புப்பாயிரம் உயர்வு நவிற்சி வகையிலும் பொருந்ாது.

> *“இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்*
> *நல்லாற்றின் நின்ற துணை”*

என்னும் குறளில், “இயல்புடைய மூவர்” என்னும் தொடருக்குப் பரிமேலழகர், “அறவியல்பினையுடைய ஏனை மூவர்க்கும்” என்று தொடருரையும், “ஏனை மூவராவார், ஆசாரியனிடத்தினின்றோதுதலும் விரதங்காத்தலுமாகிய பிரமசரியவொழுக்கத்தானும், இல்லை விட்டு வனத்தின்கட்டீயொடு சென்று மனையாள் வழிபடத் தவஞ் செய்யுமொழுக்கத்தானும் முற்றத் துறந்த யோக வொழுக்கத் தானுமென இவர்” என்று சிறப்புரையும் கூறியுள்ளார். இவற்றின் பொருந்தாமைக்குப் பல காரணங்கள் உள.

முதலாவது, பிரமசரியம், கிருகத்தம், வானப்பிரத்தம், சந்நியாசம் என்னும் நால்வகைப் பிராமணிய வாழ்க்கைநிலையைத், தமிழர் ஒப்புக்கொள்ளவில்லை. ஆதலால், வள்ளுவரும் அதைத

ஒப்புக்கொண்டிலர். தமிழர் வகுத்த வாழ்க்கைநிலையெல்லாம். இல்லறம் துறவறம் என இரண்டே. இல்லறத்தை மேற்கொள் வானின் மாணவநிலை இல்லறத்தின்பாற்படுவதே. துறவறத்தை விரும்புவானின் மாணவநிலையும், உண்மையின்மை (கூடா வொழுக்கம்), உறுதியின்மை (தொடராமை). ஆகிய காரணங்க ளால் துறவறத்தின்பாற்பட்டுவிடாது. மனைவியொடு கூடிவாழும் வாழ்க்கை ஒருபோதும் துறவாகாது. இன்ப நுகர்ச்சியாற்ற லழிந்தபின், இன்பத்தை வெறுத்ததாக நடிப்பது, பார்வையிழந்த பின் படக்காட்சி பாராமையொத்ததே. ஆதலால், உண்மையான அறநிலை தமிழர் கண்டவையே.

இரண்டாவது, "இயல்பு" என்பது அதிகாரத்தான் இல் வாழும் இயல்பைக் குறிக்குமேயன்றிப் பொதுவாக அறத்தை உணர்த்தாது. இங்குள்ள அதிகாரம் "இல்வாழ்க்கை" என்பது. பொதுவான அறம் "அறன்வலியுறுத்தல்" என்னும் அதிகாரத்திற் குரியதாம்.

மூன்றாவது,

"துறந்தார்க்கும் துவ்வா தவர்க்கும் இறந்தார்க்கும்
இல்வாழ்வான் என்பான் துணை"

என்னும் அடுத்த குறளில், துறவியரைக் குறிக்கின்றார் வள்ளுவர். முந்தின குறளில், "இயல்புடைய மூவர்" என்று குறிக்கப்பட்ட வருள் துறவியரையும் பரிமேலழகர் அடக்கிவிட்டதனால், இங்கு, "களைகணானவராற் றுறக்கப்பட்டார்" என்று "துறந்தார்" என் னும் சொற்குப் பொருந்தாப் பொருள் கூறவேண்டியதாயிற்று. துவ்வாதவருள் களைகணானவரால் துறக்கப்பட்டாரும் அடங்கு வர். துறந்தார் என்னும் வினையாலணையும்பெயர் செய்வினைவாய்ப் பாட்டிலிருப்பதால், அதற்குத் துறவியர் (உலகப்பற்றைத் துறந்த வர்) என்று நேர்பொருள் கொள்வதே நேரிதாம்.

நான்காவது, முற்றத்துறந்த யோக வொழுக்கத்தானை இல் வாழ்க்கை யதிகாரத்தின் முதற்குறளிலேயே குறிக்கத் தேவை யில்லை. வள்ளுவர் இல்லறத்தாரை முதற்குறளிற் குறித்துவிட்டுத் துறவறத்தாரை இரண்டாங்குறளிற் குறித்தார் எனவே பொருத்த மாம். இல்லறத்தாருள்ளேயே ஒருவகுப்பார் ஏனை மூவகுப்பார்க் குத் துணை என்பதை எடுத்துக்காட்டுவதே ஆசிரியர் நோக்கமாம். துறவியர் ஒருதொழிலுஞ்செய்யாமையின், அவர்க்கு இல்வாழ் வான் துணை என்பது வியக்கத்தக்க செய்தியன்று.

அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்னும் நாற்பாற் குடிகளுள், வேளாளரையே இல்லறத்தாருட் சிறந்தவராக எடுத் துக்கொண்டார் திருவள்ளுவர். அந்தணர், முனிவரான துறவறத் தாரும் புலவரான இல்லறத்தாரும் ஆக இருசாரார். ஒரு நாட்டின்

நல்வாழ்விற்கு உழவு, வணிகம், அரசு, கல்வி என்னும் நான்கும் இன்றியமையாதன. இவற்றை நடத்துவோரே, முறையே, வேளாளர், வணிகர், அரசர், அந்தணர் என்போர். வேளாளர்க் கில்லாத அறிவு, அதிகாரம், செல்வம் ஆகிய சிறப்புப்பற்றி, ஏனை மூவகுப்பாரும் நூல்களில் முற்கூறப்பெற்றனர். நகரமக்களான பதினெண் தொழிலாளரும் திணைநிலை மாந்தரான குறவரிடையர் செம்படவரும் உழவர்க்குப் பக்கத்துணைவராயிருந்தமைபற்றி, கைத்தொழிலெல்லாம் உழவில் அடக்கப்பெற்றன.

'அந்தணர் என்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுக லான்''

என்னும் இயல்வரையறைப்படி, அந்தணர் என்பது நீத்தாரையே குறிக்குமெனினும், கல்வியொப்புமைபற்றி ஆசிரியர் உவச்சர் ஆகிய இல்லறத்தாரும் நாற்பாற் பாகுபாட்டில் அந்தணரொடு சேர்க்கப்பெறுவர். இக்குலங்களெல்லாம் தொழில்பற்றியனவே யன்றி இக்காலத்திற்போற் பிறப்புப்பற்றியவல்ல.

மக்கள் உயிர்வாழ்க்கை, அரசியல் வெற்றி, இரப்போர் பிழைப்பு, துறவியல் நிலை ஆகியவற்றிற்கு உழவர் இன்றியமையா தவர் என்பதை,

"உழுவார் உலகத்தார்க் காணியஃதாற்று(து)
எழுவாரை யெல்லாம் பொறுத்து.'

"பலகுடை நீழலும் தங்குடைக்கீழ்க் காண்பர்
அலகுடை நீழ லவர்."

"இரவார் இரப்பார்க்கொன் றீவர் கரவாது
கைசெய்தூண் மாலை யவர்."

"உழவினார் கைம்மடங்கின் இல்லை விழைவதூஉம்
விட்டேமென் பார்க்கு நிலை."

என்னுங் குறள்களாற் பெறவைத்தார் திருவள்ளுவர். உழவர் எனினும் வேளாளர் எனினும் ஒன்றே. வேளாண்மைக்குச் சிறந் தமையின் உழவர் வேளாளர் எனப்பெற்றார். வேளாண்மையா வது விருந்தோம்புதலும் வேண்டியன கொடுத்துதவுதலும்.

'தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்றாங்(கு)
ஐம்புலத்தா றோம்பல் தலை."

என்னும் இல்வாழ்க்கையியல்பு வேளாளர்க்கே சிறப்பாம். களத் திற்கண்ட கண்டுமுதலில் ஆறிலொருபங்கை அரசனுக்குக் கடமை யாக இறுத்து, எஞ்சியதைத் தென்புலத்தார் தெய்வம் முதலியவர்க் குச் செலவிடுவது, வேளாளனுக்கே இயலும். ஏனையரெல்லாம்

பெரும்பாலும் குறிப்பிட்ட பணத்தையே வரியாகச் செலுத்துபவரும் வருவாயளவு கண்டுபிடிக்கப்படாத நிலைமையருமாயிருந்தனர்.

இல்வாழ்க்கைக்குச் சொல்லப்பட்ட அறங்களுள் ஒன்றான விருந்தோம்பலைப்பற்றிய அதிகாரத்தில்,

"வித்தும் இடல்வேண்டுங் கொல்லோ விருந்தோம்பி
மிச்சில் மிசைவான் புலம்."

என்று வேளாளனைமட்டும் ஏன் விதந்து குறிக்கவேண்டும்? பிற தொழில்களைக் குறியாவிடினும், திருவள்ளுவர் செய்து வந்ததாகச் சொல்லப்பெறும் நெசவுத் தொழிலைப்பற்றியாவது,

பஞ்சும் இடல்வேண்டுங் கொல்லோ விருந்தோம்பி
எஞ்சல் மிசைவான் கதிர்.

என்றோ,

நூலும் இடல்வேண்டுங் கொல்லோ விருந்தோம்பி
மேலை மிசைவான் தறி.

என்றோ, கூறியிருக்கலாமே!

"வேளாளன் என்பான் விருந்திருக்க உண்ணாதான்"

என்னும் நல்லாதனார் கூற்றும்,

"செட்டிமக்கள் வாசல்வழிச் செல்லோமே செக்காரப்
பொட்டிமக்கள் வாசல்வழிப் போகோமே—முட்டிபுகும்
பார்ப்பார் அகத்தையெட்டிப் பாரோமே எந்நாளும்
காப்பாரே வேளாளர் காண்"

என்னும் கம்பர் பாட்டும், விருந்தோம்பும் அறம் வேளாளன் சிறப்பியல்பு என்றன்றோ காட்டும்!

இனி, பாயிரத்தைச்சேர்ந்த வான்சிறப்பதிகாரத்திலும்,

"ஏரின் உழாஅர் உழவர் புயலென்னும்
வாரி வளங்குன்றிக் கால்."

என்று வேளாளரையே சிறப்பித்தோதினர் வள்ளுவர். ஆதலால், "இரப்போர் சுற்றமும் புரப்போர் கொற்றமும் உழவிடை விளைப்போர்" ஆன வேளாளரே, இல்வாழ்க்கையருட் சிறந்தவராகத் திருவள்ளுவராற் கொள்ளப்பெற்றனர் என்பது தெளிவாம். குடி (வீடு), குடியிருத்தல், குடியானவன் (உழவன்) குடிகள் என்னும் தொடர்புடைய சொற்களும், வேளாளனின் சிறப்பை ஓரளவு உணர்த்தும்.

ஆகவே,

"இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றின் நின்ற துணை"

என்னுங் குறட்கு,

இல்லறத்தோடு கூடி வாழ்வதற்குச் சிறந்தவன் என்று சொல்லப்பெறும் வேளாளன், தன்னைப்போன்றே இல்வாழும் இயல்புடைய பார்ப்பான், அரசன், வணிகன் என்னும் ஏனை மூவர்க்கும், அவர்செல்லும் நல்லற நெறிக்கண் நிலைபெற்ற துணையாம்.' என்று பொருள் கூறுவதே பொருத்தமாம்.

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்."

என்னும் குறளும் ஈண்டு நினைக்கத் தகும்.

பார்ப்பான் நூல்களை அல்லது கோயில் வினைகளைப் பார்ப்பவன். ஆகவே, ஆசிரியனும் பூசாரியுமான இல்லறத்தார் பார்ப்பார் என்பதாயிற்று. அந்தணன், பார்ப்பான் என்னும் இரண்டும் தூய தமிழ்ச்சொற்கள். இவை, பிராமணர் வருமுன், துறவியரும் இல்வாழ்வினருமான தூய தமிழரையே குறித்தன; பின்னர்ப் பிராமணர்க்கே வரையறுக்கப்பட்டுவிட்டன. இன்றும், உவச்சர், நம்பி, பண்டாரம், புலவர், போற்றி என ஆங்காங்கிருக்கும் பூசாரியரும், ஆசிரியருமான தமிழரெல்லாம் பார்ப்பாரே. பட்டினத்தடிகளும் தாயுமானவரும் போலத் துறவுபூண்ட தமிழரெல்லாம் அந்தணரே. பார்ப்பான் அல்லது பார்ப்பனன் என்னும் சொல் பிராமணன் என்பதன் திரிபென்றும், அந்தணன் என்பதற்கு ஒத்த பொருட்சொல்லான ஐயன் என்பது ஆரியன்என்பதன் திரிபென்றும், கூறுவதெல்லாம் தமிழரின் பேதைமையை அடிப்படையாகக் கொண்ட ஆரியக் குறும்பேயன்றி வேறன்று.

* * *

வாழ்த்துக்கு நன்றி.

நமக்குப் பொங்கல் வாழ்த்துக்கள் அனுப்பிய நண்பர்க்கும், தமிழன்பர்க்கும், விற்பனையாளர்தமக்கும், எம் வணக்கமும், நன்றியும் உரியவாகுக.

அன்பன்,

பெருஞ்சித்திரன்.

(ஆசிரியர், தென்மொழி.)

தமிழில் வடமொழிக் கலப்பு!!

—[கோவை வாணன்]—

முன்னுரை:

தமிழ் தனித்தது—சிறந்தது—செம்மையானது—செந்தமிழ் என்று போற்றப்படுவது—முதன்மையானது—பிறவற்றிற்கு வேறுனது;—பொருள் இலக்கணம் கொண்டது—கூட்டு எழுத்துக்கள் இல்லாதது—குறிப்புவினை கொண்டது—இடுகுறிப்பெயர் (பெரும்பாலும்) இல்லாதது—இனிய ஓசையுடையது—அஃறிணை, உயர்திணைப் பிரிவைக் கொண்டது—பொருளும் எண்ணும் பற்றிய ஐம்பால் பிரிவைக் கொண்டது—அழகும் தெளிவும் செறிந்தது. இன்சுவை இலக்கியங்களைத் தன்னகத்தே கொண்டு விளங்கும் தனிச்சிறப்புடையது. பழந்தமிழ் இலக்கணமாம் தொல்காப்பியம் செய்த தொல்காப்பியனுரைப் பெற்றுத் துறைதொறும் இலங்குவது. உலகிலேயே முதன் முதலில் கழகங் கூட்டி மொழிவளர்த்தது. காவலரால் கண்ணினும் உயர்வாகக் காக்கப்பட்டது. புலவர்தம் உயிரெனப் போற்றப்பட்டது.

நோக்கம்:

இத்துணைச் சிறப்புப்பெற்ற நந்தமிழானது, பிறமொழிகளின் அலைகளால் தாக்கப்பட்டுச் சற்றே மொழிவளம் குறைந்துள்ளது. எனவே, அதனைச் செம்மைப்படுத்த அறிவோர் முயல்வது சாலப் பொருத்தமுடையதே. இதைக் கருதியேதான் இந்தக் கட்டுரை எழுந்தது:

வடமொழிக் கலப்பு:

வடமொழி தமிழ்நாட்டில் மிகப் பழைய காலந்தொட்டே வழங்கி வருகின்றது. கழகக் காலத்திற்கு முன்னதாகவே தமிழ் மொழியில் சில வடசொற்கள் கலந்து வந்துள்ளன என்பதைப் பழைய இலக்கியங்களைக் கொண்டு ஒருவாறு உணர முடிகிறது. தமிழரின் பழக்கவழக்கங்களை யுணர்ந்து அவற்றிற்கேற்ப வடமொழியில் பல நூல்களை வடமொழியாளர் இயற்றினர். அதனுல் தமிழ் நிகண்டுகளும் சொற்பெருக்கில் பெரிதாயின. தமிழரிடம் வழங்கி வந்த ஒரே தமிழ்மொழி வழக்காற்றில் — நாளடைவில் — ஒலி, சொல்முறை, சொற்சிதைவு முதலியவற்றில் மாற்றம் அடைந்து, பல வேற்று மொழிகளாக மாறின. தமிழ் மொழியின் வேறு வடிவங்களே கன்னடம், தெலுங்கு, மலையாளம், துளு போன்றவையாகும். இதனை,

"கன்னடமும் களிதெலுங்கும் கவின்மலையா ளமும் துளுவும்
உன்னுதிரத் துதித்தெழுந்தே யொன்றுபல வாயிடினும்"

என்று பேராசிரியர் சுந்தரம் பிள்ளை தெளிவாகக் குறிக்கின்றார்.

சமணர் காலத்தில் இன்று வழக்கில் உள்ள பெரும்பாலான வடசொற்கள் தமிழில் வந்து புகுந்தன. ஆனால், சமணர் தமிழ் மொழிக்கு அரிய தொண்டுகள் செய்துள்ளனர். உண்மையில் சமணர் தழைத்தோங்கிய காலமே தமிழ்மொழியின் வளர்ச்சிக் காலம் ஆகும். இக்காலத்தில்தான் எண்ணற்ற இலக்கியங்கள் தோன்றின. தமிழ் நிகண்டுகளும், காப்பிய நூல்களும். இக்காலத்தில்தான் எழுந்தன.

சமயநூல்களில் வழங்கும் சொற்கள் காலத்தால் பிற்பட்டவை. அக்காலத்தில் நிறைந்த சமயங்களால் நம் தமிழகம் சூழப்பட்டது- வடநாட்டிலிருந்து **பௌத்தம், அருகதம், வைதிகம், ஆசீவதம்** ஆகிய சமயங்கள் தமிழ்நாட்டில் புகுந்தனவென்று இலக்கியங்களால் அறிகின்றோம். அவ்வச் சமயத்தார், தத்தம் சமயத்தைப் பரப்ப முயன்றிருப்பர். அவர் தங்கள் சமயக் கருத்துக்களைத் தமிழ்மொழியில் பெயர்த்தபோது, வடசொற்கள் பலவற்றைக் கலந்திருப்பர் என்பது நன்கு பொருத்தமன்றோ?

பிறமொழிச் சொற்கள் தமிழில்வந்து கலவாதிருக்கத், தமிழ்ப் புலவர் எவ்வளவோ முயன்றுபார்த்தும், அச்சொற்கள் கலப்பதை விலக்க முடியவில்லை. ஆகலின், அவ் வடமொழிச் சொற்களில், சிற்சில சொற்களை மட்டிலும் தம் எழுத்திலக்கண முறைகட்குத் தக்கவாறு திரித்துக் கொண்டனர். எனவே, பிறமொழிச் சொற்களாம் வடமொழிபோன்றவை தமிழில் வருவதற்கேற்ற முறைகளும் அவ்வப்போது தமிழ்ப் புலவரால் வகுக்கப்பட்டன. கழகக் காலத்திலேயே தமிழ்மொழியில் வடசொற்கள் கலந்துள்ளன. சொற்களின் வகையைக் கூறும் ஆசிரியர் தொல்காப்பியர், வடசொல்லைக் கூறும்போது,

"வடசொற் கிளவி வடவெழுத் தொரீஇ
எழுத்தொடு புணர்ந்த சொல்லா கும்மே"

என்றும்,

"சிதைந்தன வரினும் இயைந்தன வரையார்"

என்றும் குறிப்பிடுகின்றார்.

பொதுவெழுத்தான் இயன்ற சொற்களும், வடவெழுத்தானியன்று திரிந்த நிலையில் உள்ள சொற்களும் கழக இலக்கியங்களில் பயின்று வந்திருப்பதைக் காணலாம். காட்டாகச் சிலவற்றைக் காண்பாம். வாரி, மேரு, குங்குமம், முதலிய சொற்கள் பொது

எழுத்தானியன்றவை. 'அரமிய வியலகத் தியம்பும்' (அகம்.124.) என்னும் அகநானூற்றுத் தொடரில் 'அரமியம்' என்னும் சொல், 'ஹர்ம்யா' என்பதின் சிதைவாகும்.

நன்னூலில், வடமொழியைப் பற்றிக் கூறும் ஆசிரியர் பவணந்தியார்,

> "பொதுவெழுத் தானும் சிறப்பெழுத் தானும்
> ஈரெழுத் தானும் இயைவன வடசொல்"

என்று கூறிப்போந்தமை நினைவு கூர்தற்குரித்து.

பிறமொழிச் சொற்கள் தமிழில் புகுந்தன. அங்ஙனம் புகுந்தாலும், அவை தமிழ்மொழியின் இயல்புக்கேற்றவாறே புகுந்திருக்கின்றன. அச்சொற்கள் பிறமொழியினின்று நேராகத் தமிழில் நுழையாமல், பாகத மொழிகளின் வழியாகத்தான் நுழைந்திருக்கின்றன என்பது அறிஞர் கருத்து. இக்காலத்தில் பாலிமொழிச் சொற்கள் தமிழில் கலந்திருக்கவேண்டும். இதனால், பாலிமொழியறிந்த பௌத்தத் துறவியர் தமிழகத்திற்கு வந்திருக்கவேண்டும் என்பது போதருமன்றோ?

இவை எல்லாம் ஏட்டுவழக்கில் நுழைவதற்கு முன்னரே, பேச்சுவழக்கில் நுழைந்திருத்தல் வேண்டும். காட்டாக, தமிழ் ஆண்டுகளின் பெயர்கள், மாதங்கள் ஆகியவற்றைக் குறிப்பிடலாம். ஒப்பிலக்கணங் கண்ட பண்டாரகர் கால்டுவெல் அவர்தம் காட்டுக்களையே ஈண்டுக் குறிப்பிடலாம். 'பூர்வ—ஆஷாடம்' என்னும் சொல், தமிழில் **பூராடம்** ஆயிற்று. 'ஆஷாடம்' என்றசொல் ஆடம் என்றாகிப் பின்னரே ஆடி என்று ஆயிற்று. **'அஸ்வினி'** என்னும் வடசொல் தமிழில் **ஐப்பசி** என்றாயிற்று. விண்மீன், திங்கட் பெயர்கள் அனைத்திற்கும் தெலுங்கு, கன்னடம் முதலிய மொழிகளில் தனி வடமொழிச் சொற்கள் வடமொழிவடிவத்திலே வருகின்றன.

வடமொழி, தமிழ்மொழியை அறிந்து, சமணப்புலவர் வடமொழி நூல்களைத் தமிழில் மொழிபெயர்த்தனர். அப்போது மிகுதியாக வடசொற்கள் தமிழ்மொழியில் கலந்தன. இதன் பயனாக வேறொரு புதியதோர் உரைநடை தோன்றியது. இதற்கு மணிப்பிரவாளம் என்று பெயர். இந்த நடையிலே சில நூல்கள் எழுந்தன. **ஸ்ரீபுராணம்** என்னும் நூல் இந்நடையைச்சார்ந்ததே. நெறிமுறைகளையும், தத்தம் சமய நூல்களையும் தமிழுக்குப் புகட்டுவான்வேண்டித் தமிழகம் நோக்கிவந்தோர், தமது கருத்துக்களை மணிப்பிரவாள நடையிலேயே வெளியிட்டனர். நூல்களுக்கு உரையெழுதப் புகுந்

தோறும் இந்நடையிலே உரைகள் எழுதுவாராயினர். 'நாலாயிரப் பிரபந்தம்' என்ற நூலுக்கு இந்நடையில்தான் உரை எழுதினர். இதைப்போன்றே, வேற்றுமொழிகளில் உள்ள கதைகள் முதலியன தமிழில் மொழிபெயர்க்கப்பட்டன. இந்த நிலையிலே நிறைய வேற்று மொழிச் சொற்கள் தமிழில் கலந்தன. வில்லிப்புத்தூரார் பாரதம், நைடதம், தேவாரம் போன்ற நூல்களில் வடசொற்கள் ஏராளமாகக் கலந்துள்ளதனை எளிதில் காணலாம்

நன்னூல் பவணந்தியாரும், சின்னூல் குணவீர பண்டிதரும், உரையாசிரியர் பரிமேலழகரும் வடநூல் இலக்கணப் போக்கைத் தழுவியே எழுதியிருக்கின்றனர். 'பிரயோக விவேகம்' என்னும் இலக்கண நூல், வடமொழி ஒலியியலைத் தமிழின்கண் கூறித் தமிழோடு ஒப்பிடப்பட்டுள்ளது.

பின்னர், 'இலக்கணக் கொத்துரை' செய்த சாமிநாத தேசிகர், வடமொழி இலக்கணத்தைத் தமிழோடு கலந்த மட்டிலும் நில்லாது, பாயிரத்தின்கண்,

"அன்றியும் தமிழ்நூற் களவிலை அவற்றுள்
ஒன்றே யாயினும் தனித்தமி ழுண்டோ?
வடமொழி தமிழ்மொழி எனவிரு மொழியினும்
இலக்கணம் ஒன்றே என்றே எண்ணுக" —என்று

கூறியிருப்பது **"மொழியாராய்ச்சி யில்லாத இருட்காலத் தெழுந்ததாகலின்,'** அது இற்றைக்குப் பொருந்தாது.

"கேட்குந போலவும் கிளக்குந போலவும்
இயக்குந போலவும் இயற்றுந போலவும்
அஃறிணை மருங்கினும் அறையப் படுமே' — என்ற

முறையால் தமிழ்மொழியின் அணி நலத்தை உணரமுடிகிறது.

முடிவுரை:

ஆகலின், தமிழ்மொழி வேறு; வடமொழிவேறு; ஒன்றற் கொன்று யாதோர் இயைபும் இல்லை. மொழிநூல் உண்மைப்படி, பிறமொழிச் சொற்கள் தமிழ்மொழியில் வந்து வழங்க வாய்ப்புக்கள் இருந்தன.

இங்ஙனம், பிறமொழிச்சொற்கள் தமிழ்மொழியில் கலந்தமையால், ஏற்பட்ட தீமைகள் பலவாகும். தமிழரால் ஏற்படுத்தபட்ட கலைகள் பிறமொழி அலைகளால் தாக்குண்டு பெரும்பாலும் அழிந்தன. தமிழர் தம் சடங்குகள், வடமொழிச் சடங்குகளோடு கலந்து அழிந்தன. இறுதியாகக் கூறவேண்டுமானால், தமிழர்தம் பழக்கவழக்கங்களும், நாகரிகமும் வடமொழி நீர்மையோடு கலந்து, நாளடைவில் வழக்கற்று அழிந்துபோயின.

இதுகாறும் கூறியவாற்ருல், தமிழ்மொழியின் தனிச்சிறப்பு இன்னதென்பதும், வடமொழியின் தன்மை இன்னதென்பதும், அது தமிழோடு எங்ஙனம் கலந்தது என்பதும், இதனைத் தடுப்பதற்குத் தமிழ்ப் புலவர் பெருமக்கள் செய்த முயற்சி இன்னதென்பதும், வடமொழிக்கலப்பால் ஏற்பட்ட புதிய உரைநடை இன்னதென்பதும். அதனுல், தமிழ்மொழிக்கு ஏற்பட்ட தீமைகள் இவை என்பதும் தாமே போதருமன்ரே?

* * * * * *

தென்மொழி

அரையாண்டுத்தொகுப்பு

(அழகிய அட்டைக் கட்டு)

விலை ரூ. 5-00

முதல் இசையிலிருந்து பொங்கலிதழ் முடிய பன்னிரெண்டு இசைகளின் தொகுப்பு:

o தண்டமிழ் அன்பராலும், தமிழ் ஆசிரியராலும், தமிழ் மாணவராலும், விரும்பி வரவேற்கப்படும் இனிய தாளிகை தென்மொழி!

o இதுவரை உறுப்பினராகாதவரும், இனித் தொடர்ந்து படிக்க விரும்புவோரும் வாங்கிப் பாதுகாத்துப் பயனடைக. தென்மொழியின் இம் முதல் தொகுப்பு நூல் நிலையங்களில் விளங்காமற் போமாயின், அந்நூல் நிலையம் முழுச்சிறப்புப் பெற்றதாகாது.

o அறிஞர், பேராசிரியர், செம்மைசான்ற பாவலர், சிறுகதையாசிரியர் முதலியோரின், கருத்துக்கள் பொதிந்த ஐம்பத்தொரு கட்டுரைகளும், நாற்பத்தாறு பாடல்களும், ஏழு மொழியாக்கப் பாடல்களும், ஒன்பது சிறுகதைகளும், இரண்டு வரலாற்றுக் கதைகளும், நூற்றுக்கணக்கான நறுக்குச் செய்திகளும், கருத்துக்கோவைகளும் பூத்துக் குலுங்கும் இத்தொகுப்பு ஒரு செந்தமிழ்ச்சோலை என்பதில் ஐயமுண்டோ ?

பொருளடக்கம் இணைக்கப்பட்டுள்ளது.

முந்துக !

நூல், பதிவஞ்சலில் அனுப்பப் பெறும்.

தென்மொழி

நெல்லிக்குப்பம் — தெ. ஆ. மாவட்டம்.

THE REAL WEALTH

How fleeting and fickle,
How changing and tricky
The glories and the gorgeousness
Of the earth that rotates round the sun!
Within a single day
Seven hold their sway
And se'en perish
With all their wish!
And what worth their wealth, their wondrous wealth?
All is like a mustard seed
When viewed before that mighty deed
Of Renunciation and a Selfless life.
And so some truer men in the world
Did well to lose their earthly hold
And lead a life of pure renunciation.
But say not they have lost their wealth.
They are the real rich;
For those who seek the wealth they lose it
And those who lose it find it.

பருதி சூழ்ந்தவிப் பயங்கெழு மாநிலம்
ஒருபக லெழுவ ரெய்தி யற்றே
வையமுந் தவமுந் தூக்கிற் றவத்துக்
கையவி யனைத்து மாற்றா தாகலிற்
கைவிட் டனரே காதல ரதனால்
விட்டோரை விடாஅ டிருவே
விடாஅ தோரிவள் விடப்பட் டோரே.

புறநானூறு; 358.
வான்மீகியார் பாட்டு.

ம. இலெனின் தங்கப்பா. பி. ஏ., பி. டி.

பொருந்தா உளமும் பொருந்திய உயிரும்

-[மாரி-அறவாழி]-

●

[உலகம் அறிவியலில் முன்னேறியதென்றும், நாகரிகத்தில் முதிர்ந்ததென்றும் பறைமுழக்கும் வாய்கள், உள்ளத்தால் உயர்ந்துள்ளனவா? பகுத்தறிவுள்ள மாந்தர்க்குள் உயர்வு தாழ்வு கற்பிக்கும் பேதைப் புழுக்கள் இவ்வுலகில் உள்ளவரை, கல்வி, பொருள், நாகரிகம், அறிவியல் இவற்றால் முன்னேறினோம் என்று பிதற்றிப் பயனில்லை. இதைவிட இவ்வுலகத்தைத் தீயிட்டுப் பொசுக்கலாம். அச்சாம்பலாவது வருங்கால மக்களினம் தழைக்க நல்ல எருவாகட்டும்.

— ஆசிரியர்.]

''...வளர்த்த கடா மார்பில் பாய்வதா? தீட்டிய மரத்திலேயே கூர்மை பார்ப்பதா? நன்றிகெட்டவனே! உண்ட வீட்டிற்கு இரண்டகம் செய்தவனே! உன்னை என்ன செய்கிறேன் பார்!...''

''...இல்லைங்க சாமி! தெரியாமே செய்துட்டேனுங்க... இந்த ஒருமுறை மன்னித்துவிடுங்க... பெரியமனது வைத்து ஏழையைக் காப்பாத்துங்க...''

''காப்பாற்றுவதா? என்ன திமிரடா உனக்கு! அடேய் மாரி! மருதா! இந்த நாயைப் பிடித்துத் தூணில் கட்டுங்கடா... எலும்பை முறித்து வெளியே தள்ளுங்கடா...!!

''...சாமீ! ...சாமீ!... சாமீ... ஏழையை மன்னிச்சுடுங்க... என்னை விட்டுடுங்க... என்னை விட்டுடுங்க ..''

அந்த ஏழை அழுதான்; கதறினான். கெஞ்சினான். அவற்றைச் சிறிதுகூடப் பொருட்படுத்தாமல் உள்ளே சென்றுவிட்டார் அம்பலத்தடியார்.

கண்களில் புனல்சோர, கைகால்கள் நடுநடுங்க, முற்றத்தில் நின்றுகொண்டிருந்த வேலப்பனை, மாரியும் மருதனும், கழியால் தள்ளிச்சென்று தூணில் பிணித்தனர். கை ஓயும்வரையில் சாட்டையால் நன்றாக அடித்தனர்.

அவன் நிலைகுலைந்து வீழ்ந்தான். வீழ்ந்த அவனை அவர் இருவரும் தரதரவென்று இழுத்துச்சென்று மாளிகையின் சுற்றுச்சுவருக்கு வெளியே தள்ளிவிட்டுத் திரும்பினர்.

வேலப்பனின் உடலெங்கும் ஒரே பசும்புண். புதுப்பானையி லிருந்து நீர் கசிவதுபோல அந்தப் புண்களிலிருந்து குருதி கசிந் தது. மெல்லக் கையை ஊன்றி எழுந்தான். கதிரவனின் வெம் மைக்கதிர்கள் 'சுள்'ளென்று புண்களின்மேல் படிய, தாளமுடி யாத எரிச்சல் உண்டாயிற்று. தட்டுத்தடுமாறி எழுந்தான். வலி பொறுக்க முடியாமல் மீண்டும் மண்ணில் உருண்டான்.

தெருவில் போவோரும் வருவோரும் அவனை நெருங்கிச் சூழ்ந்துகொண்டனர். பெருநிலக்கிழார் அம்பலத்தாடியாரின் சமையற்காரனுக்கு ஏற்பட்ட நிலையைக்கண்டு அதிர்ச்சியுற்றனர். காரணம் என்னவென்று புரியாமல் விழித்தனர்.

"அந்தோ அவலம்! ...அடித்துக் கொல்லாமல் கொன்றிருக் கின்றனரே...!"

" வேலப்பனா? இவனுக்கு ஏன் இந்த நிலை?... நல்லவனா யிற்றே!... ஒரு வம்பு தும்புக்கும் போகமாட்டானே..! என்ன குற்றம் செய்துவிட்டான்?"

கூட்டத்தில் இப்படிப் பலவகையான முணுமுணுப்புக்கள்.

வேலப்பன் நல்லவன்தான்! அவன் எவர் வீட்டிலும் கொள்ளையடிக்கவில்லை! யாரையும் கொலைசெய்யவில்லை! எந்த அரசி யலைக் கவிழ்க்கவும் மறைவுத்திட்டம் வகுக்கவில்லை! ஆனால் அவர் களின் கணக்குப்படி, அவற்றிற்கெல்லாம் மேலான கொடுமை யான, மன்னிக்கமுடியாத ஒரு குற்றத்தைச் செய்திருக்கிறான். அதுவும் ஒருநாள் இருநாள் அன்று, இரண்டரை ஆண்டுக் கால மாக! அதைப் பெருநிலக்கிழாரும் அவரது மனைவியுமே அறி வர்.

அம்பலத்தாடியார் அந்த ஊரின் பெரிய பணக்காரர். பழுத்த கடவுள் அன்பர். செழித்த 'காங்கிரசுக்'காரர். அவரது நெற்றியில் திருநீற்றுப்பட்டையும், கொழுத்த உடலின்மேல் கதர் ஆடையும் எப்போதும் விளங்கிக்கொண்டிருக்கும். ஊரின் "அறக்காவலர்" என்ற முறையில், கோயிலுக்குமட்டுமல்லாமல், பத்துப் பதி னைந்து பட்டிகள் அடங்கிய அந்த வட்டாரத்திலும் ஓர் அரச னைப்போல ஆட்சி செலுத்திவந்தார்.

வேலப்பன் அவருடைய சமையற்காரன்! நல்ல இளம் அகவையினன்! இராமநாதபுரம் சீமையிலிருந்து தன் இளம் மனைவி யுடனும், கைக்குழந்தையுடனும் இரண்டாண்டுகளுக்கு முன்பு "ஏதிலி" (அனாதை) யாக வந்து பண்ணையாரின் காலில் விழுந்து கெஞ்சி அழுதான். பண்ணையாருக்கு இரக்கம் பிறந்தது. அவ னுடைய சமயம், சாதி, குலம், இனம், அவற்றின் உட்பிரிவுகள் எல்லாவற்றையும் விரிவாகக் கேட்டுத், தன் இனத்தான்தான் என்

பதைத் தெரிந்த பிறகே அருள்கொண்டு தன் வீட்டில் அவனைச் சமையற்காரனாக ஏற்றுக்கொண்டார்.

நன்றியுடனும், பொறுப்புடனும் கடமையாற்றிவந்த வேலப்பனிடம், விரைவிலேயே அம்பலத்தாடியாருக்கு நம்பிக்கை பிறந்தது. எனவே, மற்ற வேலையாட்கள் பொறாமைப்படும்படியாக மிகவும் அன்புடன் அவனை நடத்தினார்.

நாட்கள் மறைந்தன.

அன்றொருநாள், பண்ணையாரின் உறவினர் சிலர் இராமநாதபுரம் பக்கத்திலிருந்து வந்திருந்தனர். வந்தவர்தம் கண்களில் வேலப்பன் தற்செயலாகத் தட்டுப்பட்டான். அவனைக் கண்ட அவர் துடித்தனர். கண்களைக் கசக்கிக் கொண்டு உற்று நோக்கினர். மனம் கொதித்தனர். உடல் வெந்தனர். தலையிலடித்துக் கொண்டு அம்பலத்தாடியாரிடம் ஓடிக் காதைக்கடித்தனர்.

செய்தியை அறிந்த பண்ணையார் அடிபட்ட வேங்கை போலத் துள்ளி எழுந்தார். உறுமினார். அவர் கைகள் பெருஞ் சினத்தால் படபடத்தன. கொடுவாள் மீசை துடிதுடித்தது. முட்டைக்கண்கள் அடிவானப் பரிதிபோலச் சிவந்தன.

“அப்படியா செய்தி?” என்று வெறியுடன் இரைந்தார். தனது ஆட்களைக்கூப்பிட்டு வேலப்பனை தன்முன் நெட்டித்தள்ளி வந்து நிறுத்துமாறு பணித்தார். அவரும் அவ்வாறே செய்தனர். உடனே வேலப்பன் தூணில் பிணிக்கப்பட்டான்.

அந்த நெஞ்சுருக்கும் காட்சியைத்தான் கதையின் தொடக்கத்தில் கண்டோம்,

சாலையோரத்தில் விழுந்துகிடந்த வேலப்பன் மெல்ல எழுந்தான், தள்ளாடித் தள்ளாடித் தன் குடிசையை நோக்கி நடந்தான்.

அவன் இல்லாதவீடு, பெருநிலக்கிழாருக்கும் அவர்தம் மனைவியாருக்கும் உண்மையாகவே ஒளியிழந்துதான் காணப்பட்டது. அதை அவர் இருவரும் உணர்ந்தனர். ஆனால் அவன் ஒளிதரும் ‘விளக்கு’ அன்று, வீட்டை எரிக்கும் ‘கொள்ளி’ என்று எண்ணி ஆறுதலடைந்தனர்.

நிகழ்ச்சி நடந்த நாலைந்து நாட்களுக்குப் பின்னர், வேலப்பன் அந்த ஊரிலிருந்து எங்கோ மறைந்துவிட்டான் என்று ஊரார் பேசிக்கொண்டனர்.

இவ்வாறிருக்கையில் ஒருநாள், திடீரென்று அம்பலத்தாடியாரின் ஒரே செல்வக்குழந்தைக்கு உடல் நலிவு ஏற்பட்டது.

பெற்றோர் பதறினர். உள்ளூர் மருத்துவரிடம் காட்டினர். அவ ரால் முடியாதுபோகவே, சேலத்திலிருந்து பெரிய ஆங்கில மருத்து வர் ஒருவரை அழைத்துவந்தனர். பணத்தைப் பணம் என்று எண்ணாமல் வாரி இறைத்தனர்.

மருத்துவரும் என்னவெல்லாமோ செய்துபார்த்தார். மிக உயர்ந்த புதுமுறை மருந்துகளை உடலின் உட்செலுத்தினார் பயன் கிடைக்கவில்லை. குழந்தையின் உடலில் குருதி குறைந்திருப் பதை அறிந்தார்.

''செயற்கை முறையில் வேண்டிய அளவு குருதி உட் செலுத்தினால் குழந்தை பிழைக்கும்'' என்று கூறினார்.

பெற்றோர் சிறிதும் தயங்காமல் உடனே தமது கைகளை நீட்டித் தங்கள் குருதியை எடுத்துப் பயன்படுத்திக்கொள்ளுமாறு வேண்டினர்.

மருத்துவர் அவர்களை நோக்கி,

"இந்தப் பச்சைக்குழந்தையின் முற்றாத உடலுக்கு நம் போன்ற முதியோரின் குருதி பொருந்தாது. இதைப்போன்ற ஒரு குழந்தையின் குருதிதான் வேண்டும். இரண்டு அளவை (அவுன்சு) கிடைத்தாலும் போதும். எங்காவது முயன்று கொண்டுவாருங் கள்'' என்று கூறினார்.

பெருநிலக்கிழார் தன் செல்வத்தையும், செருக்கையும் பயன்படுத்தி ஊரிலுள்ள பெற்றோர்தம்மிடமெல்லாம் சென்று "குருதிக்கொடை'' நல்குமாறு கேட்டார். மிரட்டலினால் பயன் ஏற்படாதுபோகவே கெஞ்சிக் கேட்டார். அழுதார் என்றுகூடச் சொல்லிவிடலாம். இரண்டு அளவைக்கு இரண்டு ஆயிரம் உருபாக்கள் தருவதாகக்கூட ஆசைகாட்டினார். ஆனால்...? பணத்திற்காக எந்தத் தாய்தான் தன் குழந்தையைக் கொல்ல முன் வருவாள்... அதுவும் நாட்டுப்புறத்தில்?

ஏமாற்றத்துடன் திரும்பிய அம்பலத்தாடியார், சோர்வுடன் மருத்துவர்முன்சென்று நின்றார். நடந்ததை அறிந்துகொண்ட மருத்துவர், கழிவிரக்கத்தோடு குழந்தையையும், அதன் தந்தை யையும் மாறி மாறிப் பார்த்தார். ஏதும் பேசாமல் வெளியேறி னார். குழந்தையைத் தம்மால் பிழைக்கவைக்க முடியும் என்ற நம்பிக்கை சிறிதளவுகூட அவருக்கு இல்லை.

தொடர்ந்து வந்த பண்ணையாரிடமும், அவர்தம் மனைவி யிடமும், அதைக் கூறிவிட்டுத் தன் ''இன்பஊர்தி''யில் சேலத்தை நோக்கிப் புறப்பட்டார். எழும்பிய புகைப்படலம் கூற்றைப் போல அந்தப் பெற்றோருக்குக் காட்சியளித்தது.

இரவு நெருங்க நெருங்க இறப்பின் வாயிலை எட்டிப்பிடித்துக்கொண்டிருந்தது குழந்தை. உடலெல்லாம் வெளுத்துவிட்டது. முகத்தில் உயிர்க்களை மறைந்துவிட்டது. கண்கள் எங்கோ வெறித்து நோக்கின. விழிகள் பிதுங்கினின்றன. மழலை பேசிய வாய் அடைத்துக்கிடந்தது. காற்றினிலசையும் செங்கீரைத்தண்டைப்போலத் தளர்நடையிட்ட கால்கள் அசையாமல் கிடந்தன.

பெற்றோர், இவற்றையெல்லாம் கண்டு மனம்நைந்து கதறியழுதனர். அறையில் ஒளி உமிழ்ந்துகொண்டிருந்த அகல்விளக்கு காற்றில் ஊசலாடிக்கொண்டிருந்தது, அக்குழந்தையின் உயிரைப்போல !

அம்பலத்தாடியாரிடம் குவிந்துகிடந்த செல்வமும், அவர் நெஞ்சில் நிறைந்துகிடந்த முருகக் கடவுளின் அன்பும் அப்போது உதவிசெய்ய முன்வரவில்லை.

மாளிகையெங்கும் ஒரே சாவமைதி நிலவியது. நள்ளிருள் பன்னிரண்டுமணியிருக்கும். வெறிநாய் ஒன்று எங்கோ ஓலமிட்டுக்கொண்டிருந்தது. எங்கிருந்தோ காற்றில் மிதந்துவந்த ஆந்தையின் அலறல், அந்த ஓலத்திற்குத் தாளம் கூட்டியது.

அவ்வமயத்தில், தெருவில் "உந்துவண்டி" யொன்று விரைந்து வரும் இரைச்சல் கேட்டது. அம்பலத்தாடியார் வெளியே ஓடிவந்து பார்த்தார். ஆம்! அது ஓர் "இன்பஊர்தி" தான்!

வாயிலில் வண்டிவந்து நின்றது. அதிலிருந்து மருத்துவர் பரபரப்புடன் இறங்கினர். திடுதிடுவெனவீட்டிற்குள் நுழைந்து கண்மூடிக் கண்திறப்பதற்குள், குழந்தையைப் பருந்துபோலத் தூக்கிக்கொண்டு வண்டிக்குத்திரும்பினர்.

அம்பலதாடியார் ஒன்றும் புரியாமல் விழித்தார். எவரையும் பொருட்படுத்தாமல் வண்டிக்குள் ஓடி உட்கார்ந்த மருத்துவர், குழந்தையுடன் மின்னல் விரைவில் பறந்தார்.

செயலற்று நின்ற பெருநிலக்கிழார், தட்டுத்தடுமாறி உள்ளே சென்றார். மனைவியை அழைத்தார். ஒற்றைமாட்டு வண்டியைப் பூட்டிக்கொண்டு மருத்துவரின் வண்டியைப் பின்தொடர்ந்தார்.

வண்டி மிக விரைவில் மருத்துவர் வீட்டின் முன்சென்று நின்றது. அம்பலத்தாடியாரும் அவரது மனைவியும் வண்டியினின்றும் எட்டிக்குதித்து வீட்டிற்குள் நுழைந்தனர் .. ஆ! அங்கே அவர் கண்ட காட்சி? ? ? . .

சற்று நேரத்திற்குமுன் பிணமாகிக் கொண்டிருந்த அவர் தம் அருமைக் குழந்தையின் உடல் அப்போது உயிர்பெற்றிருந்தது. மூடிக்கிடந்த கண்கள் மலர்ந்திருந்தன. கை கால்கள் அசைந்துகொண்டிருந்தன.

ஆம்! அவர் தம் குலக்கொடி சாவிலே வாழ்வைப்பெற்று விட்டது! உயிர் பிழைத்துவிட்டது.

''அம்மா!'' என்று தன்னை நோக்கி வாயசைத்த குழந்தையை வாரி எடுத்துக் கொண்டாள் தாய்!

அம்பலத்தாடியாருக்குத் தலைகால் புரியவில்லை. தம் குல விளக்கை உயிர்ப்பித்துத் தந்த மருத்துவருக்கு என்ன கைமாறு செய்வதென்று தெரியாமல் திண்டாடினர். உணர்ச்சி மேற்பட்டு அவரை அப்படியே தழுவிக்கொண்டார், பொங்கும் கண்ணீரை அடக்க இயலாதவராய்.

''நீங்கள்தான் என் தெய்வம்! ..'' என்று நாத்தழுதழுக்கக் கூறினர். நன்றி கனிந்த மொழிகளை மட மட வென்று பொழிந்தது அவரது ''நா''!

எல்லாவற்றையும் அமைதியுடன் கேட்டுக் கொண்டேயிருந்த மருத்துவர், கடைசியில் அவரிடம் பேசினர்.

''நான் என் கடமையைத்தான் ஆற்றினேன்! உங்கள் புகழ்ச்சிக்கு உரியவன் நானல்லன்; வேறொருவர் இருக்கிறர்.....''

அம்பலத்தாடியார் வியப்புடன் மருத்துவரைப் பார்த்தார்; கேட்டார்; '' யார் அவர்?......''

'' அவர் ஓர் எளியர்! பஞ்சத்திஞல் தாழ்ந்தவர்; நெஞ்சத்திஞல் உயர்ந்தவர்!... அவர் வாழ்க்கையே ஒரு நெஞ்சுருக்கும் கதை. ! அவருடன் நான் நட்புபூண்ட அந்த இனிய மாலை நேரத்தை இன்னும் என் நெஞ்சு மறக்கவில்லை........

ஆம்!... அன்றொருநாள்... நல்ல மாலை நேரம்... நெருக்கடியான சூழ்நிலைக் குள்ளான நான் சூரமங்கலத்திலிருந்து...... மழையில் நனைந்தவண்ணமே நடந்துகொண்டிருந்தேன்-அப்போது தான் ''சவகர்'' பஞ்சாலையில் வேலை முடிந்தது. பாட்டாளிகள் குடையும் கையுமாகக் கூட்டங் கூட்டமாய் வீடுதிரும்பிக் கொண்டிருந்தனர். அவர்தம்மில் ஒருவரும் என் அவல நிலையைப் பார்க்கவில்லை. அவரவர் பாட்டிற்குச் சென்று கொண்டிருந்தனர்... ஆனல் . ஒருவர்மட்டும் என்னைக் கவனித்துவிட்டார்.

அவர் விரைந்து என் அருகில் வந்தார். தன்கையிலிருந்த கிழிந்த குடையை என்னிடம் நீட்டிப் "பிடித்துக்கொள்ளுங்கள்" என்று கூறினார்.

முன்பின் அறிமுகமில்லாத அவரை நான் வியப்புடன்பார்த்தேன். "ஏன் உங்களுக்கு வேண்டாமா?... என்று கேட்டேன்.

"வேண்டாம்! என்னைவிட உங்களுக்குத்தான் அதிகத் தேவை.! நீங்கள் நன்றாக இருந்தால் ஆயிரம் உயிர்களைக் காப்பாற்ற முடியும்... என்னைவிட நீங்களே அதிகப் பயனுள்ளவர்... பிடித்துக்கொள்ளுங்கள்..." என்று கூறி அவர் விலகி நின்றார். பிறகு இருவரும் ஒரே குடையின்கீழ் வீடுவந்து சேர்ந்தோம்...... அன்றிலிருந்து அவர் என் மதிப்பிற்குரிய நெருங்கிய நண்பரானார். நேற்று உங்கள் வீட்டிலிருந்து திரும்பிய பிறகு மிகுந்த கவலையோடு உட்கார்ந்திருந்தேன். அப்போது அவர் என்னிடம் வந்து கவலைக்குரிய காரணத்தைக் கேட்டார்.

நான், உங்கள் குழந்தையின் நிலையைக் கூறி "இரண்டு அளவை இளம்குருதியிருந்தால் பிழைக்கவைக்கமுடியும்" என்று கூறினேன். அவர் சற்றுநேரம் என்னவோ எண்ணிநின்றார். பிறகு என்னைத் தன்னுடன் தன் குடிசைக்கு அழைத்துச் சென்றார். அங்கே அவரது மனைவியும் குழந்தையும் உறங்கிக்கொண்டிருந்தனர்.

மனைவியறியாமல் குழந்தையைத் தூக்கிவந்து என்னிடம் தந்து "என்குழந்தையின் உயிருக்கும் ஊறுநேராவண்ணம் போதுமான குருதியை எடுத்துக்கொள்ளுங்கள்" என்று வேண்டிக்கொண்டார்.

நான் மகிழ்ந்தேன். நல்ல உடற்கட்டுள்ள அக்குழந்தையின் உடலிலிருந்து இரண்டு அளவை குருதி எடுத்துக்கொள்வதனால் ஒன்றும் தீமை நேராது என்று துணிந்தேன்.

அந்தக் குருதியால்தான் உங்கள் குழந்தை பிழைத்தது. எனவே நீங்கள் போற்றவேண்டியது என்னையன்று; அக்குழந்தையின் தந்தையைத்தான்......

மருத்துவர் உணர்ச்சி கொப்பளிக்கக் கூறினார்.

அப்படியா? அப்படியானால் அந்த நண்பரை இப்போதே காண்பியுங்கள்... என் நெஞ்சுச்சுமைதீர அவருக்கு நன்றி கூறினால்தான் என்மனம் அமைதியுறும்.

அம்பலத்தாடியார் துடித்தார். பிறகொருநாள் அவரைக் காட்டுவதாக மருத்துவர் கூறினார். ஆனால் அவர் விடவில்லை. அவரது வற்புறுத்தலுக்கிணங்கி அப்போதே புறப்பட்டனர்.

அம்பலத்தாடியாரையும் அவரது மனைவியாரையும் குழந்தையையும் தன்னுடன் அழைத்துக்கொண்டு வண்டியில் புறப்பட்டார்.

நகரைவிட்டு நெடுந்தொலைவில் ஓடிய வண்டி, ஊரின் ஒதுக்குப்புறத்திலிருந்த ஓர் ஏழையர் சேரியை அடைந்தது. பெருநிலக்கிழாரும், அவர்தம் மனைவியும் அருவருப்பொடு முகத்தைச் சுளித்தனர். சாக்கடையின் தீய நாற்றம் குப்பென்று எழுந்து காற்றோடு கலந்தது. அம்மையார் மூக்கைப் பிடித்துக்கொண்டார். கண்களை மூடிக்கொண்டார்.

மருத்துவர் எதற்கும் அஞ்சாமல் வண்டியைச் செலுத்தினார். தங்கள் தெருவிற்குள் ஓர் இன்ப ஊர்தி நுழைவதைக் கண்டு சேரிமக்கள் எல்லோரும் வாயைப் பிளந்துகொண்டு பார்த்தனர். சளி ஒழுகும் மூக்கினரும், பீளைவடியும் கண்ணருமான சேரிக் குழந்தைகள் ஓடிவந்து வண்டியைச் சூழ்ந்துகொண்டனர்.

குடிசைகளுக்கிடையே நுழைந்து வளைந்தும் நெளிந்தும் ஓடிய வண்டி, தனித்திருந்த ஒரு குடிசையின்முன் சென்று நின்றது. மருத்துவர் இறங்கினார். குடிசைக்குள் நுழைந்தார். அம்பலத்தாடியாரும் அவர் மனைவியும் பின்தொடர்ந்தனர்.

கதவில்லாமல் திறந்துகிடந்த குடிசையினுள் மங்கலான அகல்விளக்கு எரிந்துகொண்டிருந்தது. அங்கே விரிந்துகிடந்த பழம்பாய் ஒன்றின்மீது ஓர் இளைஞன் துன்பமே உருவாய் உட்கார்ந்திருந்தான். அவனருகே ஒரு குழந்தை துவண்டுகிடந்தது. அதனை அணைத்துக்கொண்டு இளம் பெண்ணொருத்தி தலைவிரி கோலமாக மயங்கிக்கிடந்தாள்.

காலடியொலி கேட்டுத் திரும்பினான் இளைஞன். அருகே மருத்துவர் நிற்பதைக் கண்டான். அவன் கண்கள் அருவிகளாயின.

“ஐயோ!.. மருத்துவரே!.. என்குழந்தை போய்விட்டது!. என் குழந்தை எங்களை விடுத்துப்போய்விட்டது.” என்று அரற்றினான்,

அரற்றியவன் முகத்தை மங்கிய ஒளியில் பார்த்தார் அம்பலத்தாடியார். திகைப்புற்று ஓரடி பின் வாங்கினார். அதை எதிர் பார்த்துக்கொண்டேயிருந்த மருத்துவர் அவரைநோக்கி,

ஏன் திகைக்கிறீர்?... இந்த இளைஞரை உங்களுக்கு அடையாளம் தெரியுமா?...” என்று கேட்டார்.

அம்பலத்தாடியார் தன்னை மறந்து “வேலப்பா!” என்று பெரிதாகக் கூவினார். சிறிது நேரம் அங்கே அமைதி நிலவியது.

அதனூடே சிறுசிறு விம்மல்கள்! அமைதியைக் கிழித்துக் கொண்டு மருத்துவர் பேசினார்.

"ஆம்! வேலப்பன்தான்! உங்களிடம் சமையற்காரனாக இருந்து விரட்டப்பட்டவர் தான்! தாழ்ந்ததென்றும் தீண்டப் படாததென்றும் மூடர்களால் கூறப்படும், ஒரு குலத்திலேபிறந்து வயிறு வளர்க்க வேறு வழியின்றி, சாதியை மாற்றிச்சொன்ன ஒரே குற்றத்திற்காக, உங்களிடம் அடியும் உதையும் வாங்கி, உயிர் வதை செய்யப்பட்டதோடு வேலையினின்றும் விரட்டப் பட்ட அதே வேலப்பன் தான்! .... இந்தத் தீண்டப்படாதவர் தான், உங்கள் குழந்தைக்காகத் தன் குழந்தையின் குருதியைமட் டுமன்று, உயிரையும் ஈகம் செய்தவர்!...... உங்கள் குலக்கொடி வாழ்வதற்காகத் தன் குலக்கொடியை சாவுக்கு இரையாக்கியவர்!. பொருளற்ற சாதி வெறியின் இரும்புப் பிடிக்குள்ளே சிக்கி, அறி விழந்து, மாந்தரில் உயர்வு தாழ்வு கற்பித்து மேலவரின் குருதியை அமிழ்தமென்றும், கீழவரின் குருதியைச் சாய்க்கடை நீரென்றும் கூறித்திரியும் "பெருமகனாரே!" இதோபாரும், இப்போது உங்கள் குழந்தையின் உயர்ந்த உடலில் ஓடிக்கொண்டிருப்பது யாரு டைய செந்நீர் தெரியுமா?... இவருடைய தீண்டத்தகாத குழந்தை யின் உடலிருந்து எடுத்ததுதான்! மாந்தருள் வேறுபாடு இருப்பது உண்மையானால், குருதிக்குக் குருதி உயர்வு தாழ்வு இருப்பது உண்மையானால்... நன்றாக எண்ணிப்பாருங்கள். உங்கள் குழந் தையின் உடலுக்கு இவர் குழந்தையின் குருதி பொருந்தியதாக இருக்க முடியுமா? .....

மருத்துவரின் குரல், சேரியை அதிரவைத்தது. வேலப்பன் உணர்வற்று நின்றுகொண்டிருந்தான் அம்பலத்தாடியாரின் குழந்தை எங்கோ பார்த்து எதற்காகவோ சிரித்துக்கொண்டிருந் தது. பெருநிலக்கிழார் கற்பாவைபோல நின்றுகொண்டிருந்தார். அவர் கண்களிலிருந்து கண்ணீர்த்துளிகள் உருண்டன.

ஆனால் அது வேலப்பனின் தன்னலமற்ற ஈகத்திற்காகச் சுரந்த நன்றிக் கண்ணீரா அல்லது, தன் குழந்தையை எப்படியோ பிழைக்கவைத்துக் கொடுத்த எல்லாம் வல்ல முருகனுக்காக வடிந்த அன்புக் கண்ணீரா என்பதை யார் அறிவர்?

பாட்டி

கூன் விழுந்த பாட்டி;
குட்டைக் காலை நீட்டிப்
பாலுஞ் சோறும் ஊட்டிப்
படுக்க வைப்பாள் ஆட்டி!

ஈரும் பேனும் பார்ப்பாள்!
எங்கும் தூய்மை சேர்ப்பாள்!
நோயை நன்கு தீர்ப்பாள்!
நாளும் அன்பை வார்ப்பாள்!

அண்டை வீடு செல்வாள்!
அரட்டை பேசி வெல்வாள்!
கொசுவை ஈயைக் கொல்வாள்!
கோடிக் கதைகள் சொல்வாள்!

கதிரவன்

கதிரவனே! கதிர வனே!
கடலில் வந்த கதிரவனே!
உதிராத நெருப் பாகி
உடல் கொளுத்தும் கதிரவனே!

காலையிலே தோன்றுவ தேன்?
கருவானம் நீந்துவ தேன்?
மாலையிலே மறைகுவ தேன்?
மக்க ளினம் வாழ்வதற்கோ?

காயாத ஈர மெல்லாம்
கை நீட்டித் துடைக்கின்றாய்!
ஓயாமல் ஒளி கொடுத்தே
உயிர் வாழச் செய்கின்றாய்!

கடல் நீரைக் காய்ச்சு கின்றாய்!
கருமுகிலை எழுப்பு கின்றாய்!
உடல் குளிர மழை பொழிந்தே,
உயிர் வாழச் செய்கின்றாய்!

உலகில் உள்ள இருள் விரட்ட
ஓடோடி வருகின்றாய்!
பலவகை யாய் உதவுகின்றாய்!
பயன் கருதா துழைக்கின்றாய்!

எவ்வுயிர்க்கும் நல்லவனே!
இணையில்லா வல்லவனே!
இவ்வுலகம் தழைப்பதற்கே
ஈடில்லா துழைப்பவனே!

பாடல்கள் இரண்டும் துரை. மாணிக்கம் எழுதிய "பள்ளிப் பறவைகள்" என்ற தொகுப்பிலிருந்து எடுக்கப்பட்டன.

பிள்ளை(யார்) விளையாட்டு!

அன்று மாலை ஐந்தரை மணியிருக்கும்; அலுவலகத்திலிருந்து வீட்டிற்கு வந்தேன். உடைகளைக் களைந்து மாற்றுடை அணிந்து, இருக்கையில் அமர்ந்தேன். நான் அலுவலகத்திலிருந்து திரும்புவதை, அதிலும் வீட்டிற்குள் நுழைவதைப் பிள்ளைகள் எப்படித்தான் தெரிந்து கொள்வாரோ? கடைசிப் பையன் ஒன்றரை ஆண்டு நிரம்பப்பெறாதவன், 'அப்பா, அப்பா' என்று அருகில் வந்தான். அந்நேரத்தில் ஒரு சிறுவன் 'ஐயா' என்று கூப்பிட்டுக்கொண்டு வாயிற்படியேறி வந்தான். எனக்கு முன்னரேயே தெரிந்த பையன்தான் அவன். அவன் முகவரி எழுதப்பெற்ற உறைகளை வைத்திருந்தான். என்னைக் கண்டதும் அவற்றிலிருந்து ஒன்றை எடுத்து என்னிடம் கொடுத்தான். நான் அதை வாங்கிக் கொண்டே 'என்ன செய்தி' என்று கேட்டேன். அவன் 'மணிவண்ணச் செட்டியாரவர் ஏழைப் பிள்ளைகள் தங்கிப் படிப்பதற்கென்று உணவு விடுதியொன்று தன் சொந்தச் செலவிலேயே அமைத்துள்ளார். அதன் திறப்பு விழாவிற்குத்தான் இந்த அழைப்பிதழ்' என்று கூறினான். 'ஏனப்பா அவர்தான் பெரிய கருமியாயிற்றே! அவர் எப்படி இந் நற்செயலைச் செய்ய முன் வந்தார்' என்று வினவினேன். அவன் 'மணிவண்ணனார் மூன்று மாதங்களாக நோய்வாய்ப்பட்டிருந்தார், எல்லோரும் பிழைக்கமாட்டார் என்றே கருதினர். ஆனால் அவர் பிழைத்தெழுந்தார். அதனால் இந் நற்செயலைச் செய்தார்' என்று கூறினான்.

பனிநீர்

அப்பையனின் கூற்றை நான் உண்மையென்று நம்பவில்லை. அவன் எல்லோருக்கும் தெரிந்ததை — அவர் பேசுவதைத்தான் கூறினான். உண்மைக்காரணம் வேறாக இருத்தல் வேண்டும் என எண்ணினேன்.

நேற்று நடைபெற்ற நிகழ்ச்சி போலவே அந்நிகழ்ச்சி என்னுள்ளத்தில் நன்றாகப் பதிந்து நினைவில் அழுந்தியிருந்தது. அது ஒரு சிறப்பான நிகழ்ச்சியாததால், அது பல ஆண்டுகளுக்குப் பின்னும் நினைவை விட்டு அகலவில்லை.

ஒருகால் தேனூரின் கடைத் தெருவிலுள்ள பிள்ளையார் கோயிலின் முன்பு பந்தல் போடப்பட்டிருந்தது. கடைத் தெருவில் போடப்பட்டிருந்ததால் போக்கு வரத்துக்கு இடையூறு நிகழாவண்ணம் பெரிய அளவிலேயே அமைக்கப்பட்டிருந்தது. பந்தலின் முன்பக்கத்திலுள்ள நடுவிரண்டு கால்களில் குலைகளோடு கூடிய இரு வாழைமரங்கள் கட்டப்பட்டிருந்தன. பந்தலைச் சுற்றிலும் தென்னையோலையால் செய்யப்பெற்ற தோரணங்கள் அழகு

செய்யத் தொங்க விடப்பட்டன. மற்றெல்லா பந்தற்கால்களும் மாவிலையைத் தம்மீது ஆடையாக அணிந்திருப்பன போன்று காட்சியளித்தன. மின் விளக்குகள் பந்தலின் கூரையினின்று ஒளி வீசிக்கொண்டிருந்தன. அப்பந்தற் கூரையின் உட்பக்கத்தில் துணியினால் அழகு செய்யப்பட்டு வண்ணத் தாள்களில் பூ வேலைப்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. முன்னால் கட்டப்பட்டிருந்த ஒலி பெருக்கி, ஒலிப்பதிவு செய்யப்பட்ட பாடல்களை ஒலி பெருக்கிக்கொண்டிருந்தது. நான் அன்று மாலையில் அலுவலகத்திலிருந்து வீட்டிற்கு வந்துகொண்டிருந்தேன்.

கடைத்தெருவில் அக்கோயிலின் எதிர்ப்புறத்தில் பலகடைகள் அமைக்கப்பட்டிருந்தன போலவே, அதன் இரு பக்கங்களிலும் கடைகள் இருந்தன. கோயிலை அடுத்துள்ள வீடுகளில் முதல் மூன்று வீடுகளும் திருவாளர் மணிவண்ணச்செட்டியாருடையன. அவருடைய மளிகைக் கடை, கோயிலை அடுத்துள்ள வீட்டின் முன்பக்க அறையில் வைக்கப்பட்டிருந்தது. ஒரு வீட்டில் அவர் குடியிருந்துகொண்டு மற்ற இரு வீடுகளையும் வாடகைக்கு விட்டிருந்தார். அவருக்குப் பொருளீட்டத்திலேயே நாட்டம், சிறு இடத்தைக்கூட வீணாக்க மாட்டார். வீட்டு வாடகையிலும் அவருக்கென்றே தனி அளவுதான்.

அவர் கடவுள் நம்பிக்கை மிகவுடையவர்; எளிய உருவம் கரிய நிறம், கட்டுக்குலையாத உடல், சமயச்சின்னமணிந்த நெற்றி! இவைதாம், திருவாளர் மணிவண்ணச் செட்டியார் அவர் தம் தோற்றம். மிக்க செல்வத்தை உடையவராயினும் உடுப்பது நான்கு முழமே. உண்பதும், உயிர் உடலில் தங்கியிருக்கவே. சட்டையை ஒருபொழுதும் அணியார். உடையைப் பொருத்த மட்டில் காந்தியடிகளைப் பின்பற்றுகிறவர். அதிகாலையிலும், இரவு படுக்கைக்குப் போகு முன்பும், பக்கத்திலுள்ள பிள்ளையார் கோயிலுக்குச் சென்று கடவுளை வழிபடாமற் போகார். கதிரவனும், திங்களும் தம் கடமையிலிருந்து ஒருநாள் தவறினும் தவறுவர்; செட்டியாரவர் கோயிலுக்குச்செல்லாமல் ஒருநாட்பொழுதைக்கூட கழித்தது இல்லையென்றே கூறலாம். அன்பொழுகப் பேசுவார். அது வாயளவில்தான்; உள்ளம் எப்போதுமே வரண்டுதானிருக்கும். இரக்கம் என்ற ஈரம் ஒரு சிறிதும் அதில் இல்லை. பிறர் செயல்களில் தலையிடுவதோ, அவரைப்பற்றி நினைப்பதோ தவறானது என்ற மனப்பான்மை கொண்டவர். தானுண்டு; தன் தொழிலுண்டு என்ற நோக்கம் கொண்டவர். பிறர் வாழ்ந்தாலென்ன அல்லது கெட்டொழிந்தால் நமக்கென்ன என்ற எண்ணம் கொண்டவரென்று, பார்ப்பவர் நினைத்தாலும், அவர் உள்ளத்தை நன்கறிந்தவர், அவர் பிறர் நல்வாழ்வு வாழ்வதையும் காணப் பொறுக்கார் என்பதை நன்குணருவர்.

அவருடைய மனைவியும் அவரைப் போன்றே, சிக்கனம், பொருளீட்டத்தில் தணியாத நாட்டம், பிறர்க்கு ஈந்து மகிழும் இயல்பு அருகிய நெஞ்சம் முதலியவற்றைக் கொண்டவர். பொருள் சேர்க்கும் முறையோ மிக எளிய வழிதான். வறியோர் கொடுக்கும் வட்டிப் பணம்தான் தலையாய வருவாய் ஏழை மக்கள், தங்கள் நகை நட்டுக்களையும், வெள்ளி பித்தளைக் கலங்களையும் பணத்திற்கு ஈடாக வைத்துக் கடன் பெறுவர். வட்டியோ ஒரு திங்களுக்கு ஓர் உருபாவுக்கு ஓர் அணாதான். வாங்கிய கடனைத் திருப்பித்தர இயலாமல் வாங்கிய தொகைக்குமேல் வட்டித்தொகை மிகத் தங்கள் பொருள்களைத் திரும்பப்பெற இயலாமல் இழந்தோர் தொகை அதிகம். இவ்வாறு, தேனீக்கள் ஒவ்வொரு மலருக்கும் சென்று, துளி துளியாகத் தேனைச் சேர்ப்பன போன்றே, அம்மையாரும் அணாக்களைச் சேர்ப்பர். தேனீக்கள் வாடா மலரிலுள்ள தேனை மலருக்குத் தீங்கிழைக்காமல் பெற்று, நன்மை செய்கின்றன. ஆனால் 'கண்ணம்மைத் தேனியோ' வாடிய (முக) மலராகத் தன்னை நோக்கிவரும் வறியவரிடம் தேன் துளியாகிய அணாக்களைப் பெறுவர். அவ்வாடிய மலர்களும் தம்மிடமிருந்த தேன் துளிகளாகிய அணாக்களைக் கொடுத்துவிட்டுக் கருகிவிடும்.

இருவரும் மேற்கூறிய வழிகளில் பொருளீட்டினரென்றாலும், மாந்தன் பெறத்தக்க இன்றியமையாத பேறுகளில் தலையாய மக்கட் பேற்றைப் பெற்றாரிலர். இப்பெருங் குறையை நிறைவாக்கத்தான் தெய்வத்தின் துணையை நாடினர் போலும்!

அன்று மாலையில் பிள்ளையார் கோயிலின் முன்பு செய்யப்பட்டிருந்த சிறப்பான ஏற்பாடுகளைக் கண்ணுற்று வீட்டிற்குச்சென்ற நான், இரவு பத்து மணிக்கெல்லாம், கடைத் தெருவுக்குப் பழங்கள் வாங்கிச் செல்ல வந்தேன். பந்தலில் அமைக்கப்பட்டிருந்த மின் விளக்குகள் அணைக்கப்பட்டிருந்தன; ஒலி பெருக்கி ஓய்ந்திருந்தது; பல கடைகள் மூடப்பட்டிருந்தன. கோயிலுக்கு முன்னுள்ள பால் பண்ணை மட்டும் மூடப்படவில்லை அதன் எதிரில் இரண்டு கழுதைகள் குப்பையில் கிடந்த தாள்களைப் பொறுக்கிச் சுவைத்துக்கொண்டிருந்தன. அப்பொழுது விரைவாகச்சென்ற உந்து வண்டியொன்று தெருப் புழுதியினைக் கிளப்பிவிட்டுச் சென்றது. மூக்கில் கைத்துண்டை வைத்த வாறே, பால் பண்ணையை நோக்கிச் சென்றேன், சற்றுத் தொலைவிலுள்ள, வெற்றிலை பாக்குக் கடையின் எதிரில், நான்கைந்து பேர் கூடி அரசியல் ஆய்வுரை நிகழ்த்தினர். பால் பண்ணையில் நான்கு இளைஞர்கூடிக் கமுக்கமாக ஏதோ செயலாற்றுவதில் ஈடுபட்டிருப்பதை என்னால் அறிய முடிந்தது. அதில் ஒருவர் எனக்குத் தெரிந்தவர். முத்து என்ற பெயரினர். அகவை இருபதை உடையவர். சிவந்த நிறமும், நெடிய உடலையும் கொண்டவர். எப்பொழுதும் சுறுசுறுப்பாக இருக்கும் இயல்பினர். பொதுவாகச் சொன்னால் மிக நல்ல

உள்ளம் கொண்டவர். அவரை மிக மெல்லிய குரலில் விளித்தேன் அவரும் அருகில் வந்தார் மிக அடக்கத்துடன்.

'என்ன, இவ்வேளையில் மிக்க ஊக்கத்துடன் ஏதோ பணியாற்றுகிறீரே?' என்றேன்,

'சற்றுப் பொறுத்திருந்து பாருங்கள்: ஒரு பகடி செய்யப் போகின்றோம்' என்றார் அவர்.

நான்கடி தள்ளி, ஒரு விசிப்பலகை கதவோரம் போடப்பட்டிருந்தது. அது, கடையில் தாழ்வாரத்தில் இருந்தது. அதன் மீது அமைதியாக அமர்ந்தேன். சிறிது நேரம் சென்றது. இளைஞர் நால்வரும், கதவினை மூடிவிட்டுக் கடைக்குள்ளேயே அமர்ந்திருந்தனர். கடை மூடியிருந்தாலும் கதவு சிறிது திறந்தே இருந்தது. நான் உட்கார்ந்திருந்த இடத்திலிருந்து நேர் எதிரே சற்றுத் தள்ளிக் கோயில் இருந்தது. மணிவண்ணனார் வீட்டிலிருந்து வெளியே வந்தார். கோயிலை நோக்கி நடந்தார், வெற்றிலைபாக்குக் கடையருகில் குழுமியிருந்த கூட்டம் கலைந்து சென்றது, செட்டியார் கோயிலினுள் வழிபாடு செலுத்தச் சென்றார்; ஐந்து நொடிப் பொழுதுகூட ஆகியிருக்காது, மணிவண்ணனார் கொலையாளியிடமிருந்து தப்பியோடி வருவது போன்று மிக விரைவாக வெளியே ஓடிவந்தார். நேரே வீட்டை நோக்கிப் பரபரவென்று சென்று, உள்ளே நுழைந்து தாளிட்டுக்கொண்டார். எனக்கு இவையெல்லாம் வியப்பை அளித்தமையால், அப்பால் பண்ணையினுள் உள்ள முத்துவைக் கூப்பிட்டு, 'என்னப்பா இவையெல்லாம்? கோயிலினுள் நுழைந்த செட்டியார் அவ்வளவு விரைவாக வீட்டிற்கு ஓடுவானேன்? நீங்கள் நால்வரும் மகிழ்ச்சி மேலீட்டால் பொங்கும் சிரிப்பை அடக்குவானேன்?'' என்று கேட்டேன்.

அவரும் 'நீண்ட நாட்களாகவே எங்களுக்கு ஓர் எண்ணம் தோன்றியிருந்தது, அதை இன்று செயல் படுத்தி முடிவுகாண வாய்ப்பும் கிட்டியது' என்று கூறினார்.

'என்னதான் உங்கள் எண்ணம்? அதன் முடிவு தான் என்ன என்பதை விளக்கிக் கூறுவீரா' என்று சற்றுப் பணிவுடன் கேட்டேன். அவருக்கு மிக்க மகிழ்ச்சி, அறிவியல் உண்மையொன்றைக் கண்டுபிடித்துவிட்ட அறிவியல் அறிஞரென அவர் உள்ளம் துள்ளிக்கொண்டிருந்தது போலும்! போர்க் களத்தில் வெற்றிபெற்று வாகை சூடிய மறவனின் முகம்போல அவன் முகம் காட்சி யளித்தது, அவர் கூறினார்;

''நாங்கள் ஒலிபெருக்கி அமைப்பைப், பாட்டுக்கள்போட்டு முடிந்தவுடன், அவிழ்த்து எடுத்துச் செல்ல முயன்றோம். மணிவண்ணனாரின் நினைவு வரவே, ஒலி பரப்பப்படும் வைத்தூற்றி'

(FUNNEL) போன்ற பகுதியை அப்படியே பிள்ளையார் படிவத்தின் பின்புறத்தில் வைத்துவிட்டு, ஒலி வாங்கியை இப்பால் பண்ணையில் வைத்துக்கொண்டோம். செட்டியார், பிள்ளையார் படிவத்தின் முன் வணங்கி இருத்தல் வேண்டும். அக்கால் எங்களில் ஒருவர் மிகவும் மெல்லிய குரலில் 'அப்பனே! மணி வண்ணு!, உன் அன்பின் திறத்தை யாமறிவோம். இனி நொடிப்பொழுது கூட உன்னை இந்நிலவுலகில் விட்டுவைக்க விரும்பவில்லை. அருகில் வா; ஆட்கொள்ளப்போகின்றோம்' என்று கூறினர். பிறகு செட்டியாரைப் பார்க்க வேண்டுமே'' என்று கூறினர். அவரின் விளையாட்டைப்பற்றி எண்ணியவாறே வீட்டிற்கு வந்தேன்.

*   *   *   *   *   *

மணிவண்ணனாரின் உடல் நலிவுக்குத் தகுந்த காரணம் இந்நிகழ்ச்சியாகத் தானிருக்கவேண்டும் என்று திண்ணமாக நம்பினேன். அவரின் அழைப்புக்கிணங்கி, உணவு விடுதித் திறப்பு விழாவுக்குச் சென்றேன். விழாவில் பேச்சாளர் ஒவ்வொருவரும் மணிவண்ணனாரின் சீரிய செயலைப் பாராட்டிப் போற்றிப் பேசினர். கூட்டம் இனிது முடிந்தது. வந்தவரெல்லாம் விடையேற்றுச் சென்றபின், மணிவண்ணனாரிடம் தனிப்படப் பேசி அவர் நோய் வாய்ப்பட்ட செய்திகளை உசாவியறிய அணுகினேன். இருவரும் அலுவலக அறைக்குள் சென்று இருக்கைகளில் அமர்ந்தோம். விழாவிற்கென அமைத்த ஒலி பெருக்கியின் ஓலம் அப்பொழுதுதான் ஓய்ந்தது. அமைதி நிலவியது. அவர் பேசினர்.

"ஐயா, சுமார் மூன்று மாதங்களுக்கு முன்பு ஒருநாள் நடந்தது அந் நிகழ்ச்சி. அதுதான் என் வாழ்க்கையின் போக்கையே வேறு வழியில் திருப்பிவிட்டது. என்னையும் முன்பிருந்த மாந்தன் தன்மையிலிருந்து முற்றிலும் புதிய மாந்தனுக ஆக்கிவிட்டதாக உணர்கின்றேன். அன்று வழக்கம் போலவே, இரவு படுக்கைக்குச் செல்லுமுன், நம்வீட்டிற்குப் பக்கலிலுள்ள பிள்ளையார் கோயிலுக்கு வழிபாடு செய்யச் சென்றேன். இரு கண்களையும் மூடி அமைதியுடன் நின்றிருந்தேன். எங்கும் ஒரே அமைதி. எப்பொழுதும், அப்படிப்பட்ட நேரத்தில்தான் நான் வழிபாடு செலுத்துவது வழக்கம். என்னைத் தவிர வேறு ஒருவரும் கோவிலுக்குள்ளேயோ அல்லது வெளியிலோ இலர். சில நொடிப் பொழுது சென்றவுடன் ஒரு மெல்லோசை என் காதில் விழுந்தது. அது மிக மெல்லிய ஓசையாக இருந்தாலும், அங்கு ஏற்பட்டிருந்த அமைதியான சூழ்நிலையில் மிகவும் தெளிவாகவே கேட்டது. கண்களைத் திறந்தேன்; கூர்ந்து நோக்கினேன். 'அப்பனே! மணிவண்ணு உன் அன்பின் திறத்தை யாமறிவோம். இனி நொடிப்பொழுது கூட உன்னை இவ்வுலகில் விட்டுவைக்க விரும்பவில்லை. அருகில் வா. உன்னை ஆட்கொள்ளப் போகின்றோம்' என்ற ஒலி உள்ளிருந்து வந்தது. இது படக் காட்சியில் தவிர நம்முடைய வாழ்க்கையில் நடக்காத ஒரு நிகழ்ச்சியாதலாலும், என்னுடைய இவ்வுலக வாழ்வுக்கே முடிவுகாலம் நெருங்கிவிட்டதென உணர்ந்த

நடுக்கத்தாலும், அப்பேச்சு பிள்ளையாரால் தான் பேசப்பட்டதா என்பதையும், அப் படிவத்தின், உதடுகள் அசைந்துதான் பேசப் பட்டதா என்பதையும் என்னால் காண இயலாமற் போயிற்று. இவ்வுலகமே ஊழி விரைவில் சுற்றத் தொடங்கியது; கண்கள் இருண்டன! வாய் திறக்க முடியவில்லை. ஐம்புலன்களும் ஒடுங்கத் தொடங்கின. அவற்றிடையே என் மனம் மட்டும் இவ்வகவை யிலேயே இவ்வுலக வாழ்க்கையை நீத்துச் செல்லவதற்கா, அரும் பாடுபட்டுப் பெரும் செல்வத்தைச் சேர்த்து வைத்திருக்கின்றோம் என எண்ணியது. கால்கள் தாமாகவே வீட்டைநோக்கி மிகவிரை வாக ஓடின. என் வாழ்க்கையிலேயே அன்றுதான் அவ்வளவு விரைவாக ஓடியிருப்பேன். உயிரைக் காக்கும் பொருட்டு ஓடிய ஓட்டமல்லவா?''

''மறுநாட் காலையில் நான் அதிகாலையிலேயே எழாமல் படுக்கையிலேயே இருந்தது என்மனைவிக்கு வியப்பாக இருந்ததாம். அச்சத்துடனேயே என் அருகில் வந்து, என்னை எழுப்ப முயன்ற பொழுது, நான் என் நினைவு இன்றிக் காய்ச்சலின் கொடுமையில் சிக்கியிருப்பதை அறிந்து, மருத்துவரை வரவழைத்தாளாம். அவர் மருந்தை ஊசிமூலம் உடலுட் செலுத்திய பின்பே எனக்கு மீண் டும் நினைவு வந்ததாம். மருத்துவர், உள்ளத்திற்கு மிக்க அதிர்ச்சி தரும் நிகழ்ச்சியாலோ அன்றி மிகுந்த அச்சத்தின் விளைவாலோ ஏற் பட்டிருக்கக கூடும் இக் காய்ச்சல்' என்று கூறிச் சென்றார். மருத் துவர் நாள் தவறாமல் இருவேளையும் வந்து சென்றார் மருந்து வகைகளும் மாற்றிமாற்றிக் கொடுக்கப்பட்டன. உடல் என் னவோ தேறியபாடில்லை. இறப்பின் வாயிலை நோக்கிச் சென்று கொண்டிருந்தேன். உற்றார் உறவினர் வந்துசென்றனர். நண்பர் ஒரிருவர் பார்த்துவிட்டுச் சென்றனர். எல்லோருக்கும் நான், இனிப் பிழைக்கமாட்டேன் என்ற எண்ணம் ஏற்பட்டுவிட்டது. விரைவில் அச்சொல் என் காதிலேயே விழும்படி பேசத்தொடங் கினர். என் உடன்பிறந்தோரின் பிள்ளைகள் எனக்குப் பின் சொத்துக்களை எப்படிப் பங்கிட்டுக்கொள்வது என்பதில் ஈடுபட் டுப் பூசல் விளைவித்ததை நான் உணர்ந்தேன். அன்று பிள்ளையார் கோயிலில், மெல்லோசையைக் கேட்டபொழுது ஒடுங்கிய ஐம் புலன்களின் நிலையிலேயே அவை யிருந்தன. அன்று மனம் எண் ணிய எண்ணத்தையே இன்றும் எண்ணியது. இவ்வகவை யிலேயே இம்மண்ணுலக வாழ்வை நீத்துச் செல்லுதற்கா—பெரும் பொருள் ஈட்டி இப் பயல்களுக்கு வைத்துச்செல்வதற்கா—நான் பிறந்தேன் என என் உள்ளம் மறுபடியும் விழித்துக்கொண்டதை நான் உணர்ந்தேன். இறப்பின் படுக்கையிலும் அதிகாலையிலேயே விழித்துக்கொள்ளுவேன். என் உள்ளம் அமைதியடையவில்லை, மாறாக எண்ணத்தொடங்கியது. ஓயாத எண்ணப்போராட்டங் கள் எழுந்தன. ஏதோ ஒருவகை முடிவுக்கு வருவதும், அது சரி யான முடிவன்று என்று மீண்டும் எண்ணுவதுமாகச் சில நாட்

(தொடர்ச்சி 38-ஆம் பக்கம்)

அறுபருவத் திருக்கூத்து

துரை. மாணிக்கம்.

முன்னுரை:

நம் நாட்டினர், இயற்கை காட்டும் கோலத்தைக் கூர்ந்து நோக்கிக் காலத்தை அறுவகைகளாகப் பிரித்தனர். அவை கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதிர்வேனில் என்பன. இவற்றை வடமொழியாளர் வருஷசம், சரத், ஹேமந்தம், சிசிரம், வசந்தம், கிரீஷ்மம், என்பர். மேனாட்டார் கார், கூதிரை ஒன்றுபடுத்தி Winter என்றும், முன்பனி பின்பனியை ஒன்றாக்கி Spring என்றும், இளவேனில் முதிர்வேனிலை ஒன்றாக்கி Summer என்றும் பாகுபாடு படுத்துவர். அவர்க்குக் காலத் தொடக்கமும் முடிவும் வேறு.

பண்பியல்களையும், இயற்கை நலன்களையும் துல்லியமாக அறியவே பண்டைத் தமிழர் விரும்பினர் என்பதை அவர் வகுத்த திணை, துறை பாகுபாட்டியல்களையும் பருவ இயல்களையும் ஊன்றியுணர்வார் தெளிவர்.

நமக்குள்ள ஆறு காலங்களிலும் நிகழும் மாந்தர்தம் சிறப்பு நிகழ்ச்சிகளையும், விலங்கு, பறவை இவற்றின் நடப்பு முறைகளையும், வானிலும், மலையிலும், காவிலும், கழனிகளிலும் ஏற்படும் இயற்கை ஓவிய மாறுபாடுகளையும் பண்டைப் புலவர் கூர்ந்து நோக்கி யுணர்ந்தவர் என்பதை நம் கழக நூல்களின் இடையிடையே கூறப்பட்டுள்ள இயற்கைக் காட்சிப் பாடல்கள் தெள்ளிதின் விளக்கும்.

கற்றறிந்தார் ஏத்துங் கலியில் பெரும்பாலும் பாலையிலும், சிறுபான்மை வேற்றிடங்களிலும், குறுந்தொகையில் சிற்சில பாடல்களின் சிற்சில வரிகளிலும், பத்துப்பாட்டில் சிறப்பாக நெடுநல் வாடையிலும், பொதுவாக முல்லைப்பாட்டுப் பட்டினப் பாலையிலும் பிறவற்றிலும், நாலடித்திணைகளிலும், சிலப்பதிகாரத்தில் சிறப்பாகக் கானல் வரியிலும், ஊர்காண் காதையிலும் மற்றும் ஒரோவோரிடங்களிலும், அகநானூற்றில் சிற்சில பாடல்களிலும் பருவ நிகழ்ச்சிகள் கூறப்பட்டிருக்கின்றன எனினும் அவை முழுமை எய்தினவாகா. இன்னின்ன பருவத்தே இன்னின்ன பூக்கள், காய்கள், கனிகள், தோன்றும் என்றும், இன்னின்ன நிகழ்ச்சிகள் நடக்கும் என்றும் ஒருங்கு படுத்திக் கூறத் தமிழில் ஒரு நூல்தானும் இல்லை. இருந்திருப்பினும் அதுபற்றிக் குறிப்புக் கிடைக்கவில்லை. குறிப்புக் கிடைப்பினும் நூல் இல்லாதது தமிழ் இலக்கியக் குறைபாடே.

வடமொழியில் இக்குறைபாட்டை அறிந்து களைந்தவர் பெரும்புலவர் காளிதாசர் என்பர். அவர் **ருது சம்ஹாரம்** என்ற பருவ நூலை எழுதியதாகக் கூறுவர். நூல் முழுதும் கிடைப்பினும், அதைப் பாடியவர் பற்றிக் கருத்துவேற்றுமை

கள் உள்ளன. எது எவ்வாறாயினும் வடமொழி ருதுசம்ஹாரம் போன்ற பருவ நூல் தமிழில் தேவையானதை உணர்ந்தேன்.

இதுபற்றி எளிதாக எண்ணி எழுதத் தொடங்கிய பின்னரே, இதை எழுதுவதில் உள்ள தொல்லைகளை உணரலானேன். தளம்போட்ட வீட்டில், இயங்கிகளின் பேரொலியிலும் மக்கள் ஆரவாரங்கட்கிடையிலும் அமர்ந்துகொண்டு, அமைதியும் இயற்கை அழகும் சூழ்ந்த மலைபற்றியும், காடு பற்றியும், அவற்றின் கோலங்கள் பற்றியும் எழுதப்புகுந்தது என் தொல்லைக்கு முதற் காரணம்.

பண்டைப் புலவர் காடுகளிலும், மேடுகளிலும், வயல் வரப்புக்களிலும், சுற்றியலைந்து கண்டவாறு போலல்லாது, அவை பற்றி நேரில்கண்டு அறியாமல், இயற்கை விழைவும் வேட்கையும் ஒன்றே காரணமாகி, அதனைப் பற்றிக்கொண்டு கற்பனைக் குன்றேறி நிற்கவும், எண்ணப் பொய்கையில் மூழ்கவும் கருத்துச் சோலைகளில் உலாவவும் முற்பட்டது, அடுத்த தொல்லை.

இவற்றின் சூழ்வில் இருந்தது ஒருவகையில் நன்மையாகவும் பட்டது. வெயிலில் அலைந்து வாடிய ஒருவன் நிழலருமை கண்டு மகிழ்வது போல், இப்புன்மை ஆரவாரப் புரையொலிகட் கிடையில், உண்மையான இயற்கை வேட்கை எனக்கு மிக்கிருந்து கற்பனையும் பெருக்கெடுத்தோடியது. அக் கற்பனை அழகில் மூழ்கி நான்கண்ட நிழலின்பம் கூறுதற்கெளியதன்று.

மேலும் இதை எழுதப் புகுமுன் எனக்கிருந்த சூழ்நிலைகள் பற்றி, இதனை நூலாக அச்சிடுங்கால் விரித்து எழுதுகின்றேன்.

இந்நூலைப் படிக்குமுன் உள்ளத்தை இயற்கைக் கடிமையாக்கிக் கொள்ளுமாறு படிப்பாரை வேண்டுகிறேன். அவ்வாறு இயற்கையின்பாற் படுத்தப் பட்ட உள்ளத்தே தான் அழகும் அதனைக் கண்டுணரும் ஆற்றலும் மிகும், என்பதும், அவ்வாறு இயற்கை உணர்வு மிக மிகத்தான் மாந்தப் பண்பாடு மிளிரும் என்பதும், அவ்வாறு மிளிர மிளிரத்தான் மாநிலம் உய்யும் என்பதும் இதனை முழுதுங் கற்று முடிப்பார் தெளிவாக உணர்வர். இத்தகைய இயற்கை நல நூல்கள் குறைந்து, ஐம்புலன் உணர்வை மட்டுமே தட்டி யெழுப்புகின்ற புன்மை நூல்கள் இடைக்காலத்தே எழுந்தமையாலேயே தமிழ்நாட்டார் தம்பால் பண்பொழுங்கும், ஒற்றுமை உணர்வும், கெட்டொழிந்து போயின. இத்தகைய நல்லுணர்வுகளை, ஒருவர், உள்ளத்தே வித்திடச் செய்வதே இவ் **'வறுபருவத் திருக்கூத்தின்'** முழுக் குறிக்கோள் ஆகும்,

தமிழ் ஆசிரியரும், மாணவரும் நூலை ஊன்றிச்சுவைக்க.

(— தொடரும்)

(6-ஆம் பக்கத் தொடர்ச்சி)

மக்கள் குலத்தில் தாழ்ந்தோன் உயர்ந்தோன் என்று பாகுபாடு செய்யும்வரை நீங்கள் உயரப்போவதில்லை. தமிழ் பேசுவோர், தமிழ்த் தாய்க்குந் தந்தைக்கும் பிறந்து தமிழன் என்று சொல்லிக் கொள்ளும்வரை நீங்கள் உலகில் உள்ளவரோடு ஒப்பவைத்துச் சிறப்பிக்கப்படப் போவதில்லை. பள்ளனென்றும், பறையனென்றும், பிள்ளையென்றும், முதலியென்றும், பெயர்கள் சூட்டிக்கொண்டு பிதற்றித்திரியும் வரை நீங்கள் தமிழர் அல்லர். அவ்வாறு கூறிக்கொள்வதில் பொருளுமில்லை. சைவமென்றும், சைவமே தமிழ் என்றும், வைணவம் என்றும், வைணவமே தமிழ் என்றும், பௌத்தம் என்றும், பௌத்தமே தமிழ் என்றும். சமணம் என்றும் சமணமே தமிழ் என்றும், கூறிக்கொண்டு மக்களை மக்கள் என்று கூற மறுத்தீர். இந்த இழிநிலை உள்ளவரை தமிழ்நாட்டைத் தமிழ்நாடென்று உலகில் வேறு ஒருவனும் கூற விரும்பமாட்டான்.

"இத்தகைய பாகுபாடுகள் இல்லாமற் போமாயின், தமிழ் நூல்கள் இல்லை, தமிழ் இலக்கியங்கள் இல்லை" என்று கூறுவீருளல் அத்தமிழ் நூல்களும், தமிழ் இலக்கியங்களும் அழிந்து போகட்டும். நீங்கள் எழுதிவைத்த தமிழ் இலக்கியங்களும் நெறி நூல்களும் தமிழ்நாட்டிற்கே பயன்படப்போவதில்லையாயின் வேறு எந்நாட்டவர்க்கு அந்நூல்கள் பயன்படப் போகின்றன. அறிஞரே எண்ணிப் பார்மின்.

சாதிச் சழக்குகளும், சமயப்புரட்டுக்களும் நம் நாட்டை உய்விக்கவில்லை என்பதை ஐயாயிர மாண்டுகளாக- ஏன், கல் தோன்றி மண்தோன்றா முன்பிருந்தே கண்டோம். கண்டும் உணர்ந்தோமா? இல்லையே; இன்றைக்கும் அக் கொடும் பள்ளத்தாக்குப் படுகுழிகளிலிருந்து மீளமுடியவில்லையே. இன்று தமிழன் என்று தம்மைச் சொல்லிக்கொள்வார் ஒவ்வொருவருக்கும் - தமிழ் என்மொழி; அது என்விழி; என்று அழகுபட மொழிவார் ஒவ்வொருவருக்கும் விடுக்கும் வேண்டுகோள் இது தான்?

உங்கள் தமிழ் நூற்கள் உங்கட்குப் பெருமைதரும் அளவிற்கு உள்ளனவா? அஃதாயின் உங்கள் பெருமையின் அளவு எது?

நெஞ்சைத் தொட்டுத் திருக்குறளைக் கையேந்தி இதற்கு விடைகூறுங்கள். திருக்குறள் இப்பொழுந் தமிழன் கையிலிருக்க வேண்டிய நூலன்று... நிலாவுலகத்துக்குப் போவதாகக் கூறிக் கொள்ளும் அறிவியல் வல்லுநர்க்கு ஒருசொல். "நீங்கள் அங்கு அழைத்துப்போகும் மக்களுள் ஓர் அமரிக்கனும், ஓர் உருசியனும், ஓர் ஆங்கிலேயனும், ஒரு சீனனும், ஒரு சப்பானியனும், ஒரு பிரஞ்சியனும் என நாட்டிற் கொருவராக இருக்கவிடலாம்.

ஆனால் இத்தமிழ்நாட்டான் ஒருவனைக்கூட அங்குக் கொண்டு போகவேண்டாம், அவன் வந்தால் அந்தூய நிலாவுலகத்தில் சாதிகள் என்னும் முட்காடு முளைக்கும்; சமயங்கள் எனும் படுகுழிகள் வெட்டப்படும். இப் பாழுந் தமிழனுக்காக இவன் நாட்டிலுள்ள திருக்குறளைமட்டும் எடுத்துக்கொண்டு போங்கள். அது இவனிடமிருப்பதைவிட உங்கள் எல்லோரிடமும் இருப்பது நல்லது''

(34-ஆம் பக்கத் தொடர்ச்சி)

கள் கழிந்தன. இவ்வுள்ளப் போராடத்தில் ஈடுபட்ட நாட்களில் என் உடல் நலிவை மறந்திருந்தேன். அம்மனப் போராட்டத்தின் விளைவே என் முடிவாயிற்று. அதன் விளைவே அவ்வுணவு விடுதி அமைக்கும் செயலாக மலர்ந்தது.

இவ்வுலகம் எப்பொழுது தோன்றியது? ஏன் தோன்றியது? மாந்தன் ஏன் தோன்றினான்? அவனுடைய இனம் ஏன் தோன்றிற்று? தோன்றித் தோன்றி மறைந்துகொண்டேயிருக்கும் வகையென்ன? நான் ஏன் பிறந்தேன்? என்னுடைய பிறப்பின் நோக்கம் யாதாயிருக்கும்? இப்பிறப்பில் நான் செய்யவேண்டிய கடமை என்னவாயிருக்கும்? எப்படியிருந்தால் நலமாக இருக்கும்? பிற உயிர்களைப்போல் உணவு தேடுவதும், உண்பதும் உறங்குவதுமாக இருந்தால் போதுமா? அப்படியிருந்தால் என்ன சிறப்பிருக்கும்? மாந்தனுக்கும் விலங்குகளுக்கும் உள்ள தனிச்சிறப்பு என்ன? அவன் வாழ்க்கையில் அவற்றின் பழக்கவழக்கங்களினின்று வேறுபட்டு, விலகி, மாந்தனைச் சிறப்புடன் வாழ என்னென்ன வழிவகைகளைக் கைக்கொள்ளவேண்டும்? என்டன போன்ற கேள்விகளுக்கு விடை காணத்தான் நான் முயன்றேன். ஓரளவு மனத்தெளிவுபெற்றேன். அந்தமட்டில் நான் இறக்குமுன்பாக எண்ணவேண்டியதை எண்ணி. உயிர்பிழைத்து. நல்லது செய்ய முடிந்தமைக்காக மகிழ்கின்றேன்'' என்று கூறிமுடித்தார்.

சுவரில் மாட்டியிருந்த மணிப்பொறி பத்துமுறை ஒலித்து ஓய்ந்தது. மணிவண்ணனாரும் 'மீண்டும் ஓய்வு கிடைப்பின் வாருங்கள். விடுதியின் நடைமுறைபற்றியும், வருங்காலத் தமிழகத்திற்கு, ஒழுக்கத்திலும், உணர்விலும், அன்பிலும், பண்பிலும், அறிவிலும் சிறந்த மாணவமணிகளைத் தோற்றுவிக்கத்தான் இவ் விடுதி அமைத்துள்ளேன் என்பவற்றையும் விளக்கிக் கூறுகின்றேன், இவற்றைப்பற்றி உங்களுடைய அறிவுரைகளையும் பெற, விழைவுகொண்டுள்ளேன்' என்று கூறினார்.

நான் 'நல்லது ஐயா, அப்படியே ஆகட்டும்' என்றுகூறி அவரிடமிருந்து விடைபெற்று வீடுநோக்கிவந்தேன் வரும் வழியில் ஒரு வீட்டுத் திண்ணையில் சிலர் உட்கார்ந்து, மணிவண்ணனாரின் செய்கையைப் புகழ்ந்து பேசிக்கொண்டிருந்ததைக் காதுகுளிரக் கேட்டேன். நந்தமிழ்நாட்டிலுள்ள கணக்கற்ற 'மணிவண்ணனார்கள்' மாந்தராக மாறினால் எவ்வளவு நலமாக இருக்கும் என்ற எண்ணத்தில் ஊன்றி வீட்டை நோக்கி நடந்தேன்.

இலக்கியம்

அரசியல்

மொழியாராய்ச்சி

அறிவியல்

நூல்களை

நல்லமுறையில்

வெளியிடுகின்றேம்.

வள்ளுவர் பதிப்பகம்

நெல்லிக்குப்பம்,

(தெ. ஆ.)

தமிழ்நாடு.

தென்மொழி

விளம்பரக் கட்டணம்.

—

அட்டை நான்காவது பக்கம் முழுமையும்	ரூ.	50-00
,, இரண்டாவது அரைப்பக்கம்	ரூ.	25-00
,, மூன்றாவது முழுப்பக்கம்	ரூ.	40-00
,, அரைப்பக்கம்	ரூ.	20-00
உள்ளே முழுப்பக்கம்	ரூ.	30-00
,, அரைப்பக்கம்	ரூ.	15-00
,, கால்பக்கம்	ரூ	8-00

வரி விளம்பரங்களுக்குத் தனியே எழுதவும்.

அமைச்சர்

தென்மொழி

நெல்லிக்குப்பம்,

தெ. ஆ.மாவட்டம் (தமிழ்நாடு)

துரை மாணிக்கம் எழுதிய

கொய்யாக்கனி

அருமையான கற்பனைக்காப்பியம்.

பாட்டுக்காக ஒருமுறை!

கருத்துக்காக ஒருமுறை!

தெளிவுக்காக ஒருமுறை!

— என்று எத்தனை முறைகள் படித்தாலும் அலுப்புத் தட்டாது.

விலை உருபா. 2-25.

தென்மொழி உறுப்பினர்க்கு உருபா 2-00.

விற்பனை உரிமை;

வள்ளுவர் பதிப்பகம்

நெல்லிக்குப்பம் — தெ. ஆ.

பதிவு எண். எம். 7211.

'தென்மொழி' உறுப்பினர்க்கு

* 'தென்மொழி' முதல் இசையிலிருந்து உறுப்பினராக விருக்கின்றவர்க்குப் (பொங்கல் மலர் பெற்றவரா யிருப்பினும், பெறாதவராயிருப்பினும்) பதினான்காம் இசையோடு கட்டணம் முடிவுறுவதால், பதினைந் தாம் இசையிலிருந்து அன்னார் தங்கள் கையொப் பத்தைப் புதுப்பித்துக் கொள்ள வேண்டுகின்றோம். அவ்வாறு முன்னரே புதுப்பிக்காதவருக்குப் பதினைந்தாம் இசையிலிருந்து இதழ்கள் நிறுத்தப் பெறும்.

* அலுவலகத்திற்கு எழுதும் மடல்களில் உறுப்பினர் தங்கள் முகவரிகளைத் தவறுமல் குறிப்பதுடன், தந்தம் உறுப்பினர் எண்களையும் குறிக்குமாறு வேண்டிக் கொள்கின்றோம்.

* புதுப்பித்துக்கொள்ளும் பழய உறுப்பினர், முன் னிருந்த உறுப்பினர் எண்களைத் தவறாது பண விடைத் (Money Order) தாளில் குறித்தனுப்பு மாறு வேண்டுகின்றோம்.

— அமைச்சர்

தென்மொழி, நெல்லிக்குப்பம், தெ. ஆ. மாவட்டம்.

வள்ளுவர் பதிப்பக உரிமையாளர், கூ. இரா. செகந்நாதன் அவரால் நெல்லிக்குப்பம் (தெ. ஆ. மாவட்டம்) குரு அச்சகத்தில் அச்சிடப்பட்டுப், பெருஞ்சித்திரன் அவரை ஆசிரியராகக்கொண்டு வெளியிடப்பட்டது.